

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2023

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

2024

இலங்கை, பேராதனை விவசாயத் திணைக்கள முன்னேற்ற கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவினால் இவ்வறிக்கை தொகுக்கப்பட்டு விவசாயப்பிரசுரப்பிரிவினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

அனைத்து உரிமைகளையும் கொண்டது. சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர, ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டாது. இலங்கை விவசாயத் திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்காக இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. இந்த பதிப்புரிமையானது விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

2023 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : விவசாயத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல:285

உள்ளடக்கம்

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 1

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 11

அத்தியாயம் 03 - 2023 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை..... 27

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் 36

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 47

அத்தியாயம் 06 - மனித வளங்களின் விபரம் 48

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை 50

இணைப்புகள் 58

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

விவசாயத் திணைக்களமானது விவசாய அமைச்சின் கீழ் இயங்குவதோடு, இது சிறந்த கல்வித்கமைகளுடன் கூடிய விவசாய நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் பணிபுரியும் நிறுவனங்களின் நாடளாவிய வலையமைப்பைக் கொண்ட ஒரு மிகப்பெரிய அரசாங்கத் திணைக்களமாகும்.

விவசாயியின் வருவாய், வாழ்க்கைத்தரம் என்பவற்றினை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை நியாயமான விலையில் பெற்றுக்கொடுக்கும் வகையில் பசுமை விவசாயக் கொள்கையுடனான உணவுப் பயிர்த் துறையின் விளைதிறன் மற்றும் உற்பத்தி என்பவற்றினை நிலையான வகையில் விருத்தி செய்தல் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் இலக்குகள் முன்னோக்கப்படுகின்றன.

இலங்கையில் விவசாயத் துறைசார்ந்த ஒழுங்குபடுத்தல் விவகாரங்களின் பிரதான பங்குதாரராக விளங்கும் விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவக் கட்டமைப்பானது நெற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நான்கு பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களையும் விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் பயிர் பாதுகாப்பிற்கான நிலையம், விதை மற்றும் நடுகைப்பொருட்களிற்கான அபிவிருத்தி நிலையம், விரிவாக்கத்திற்கும் பயிற்சிக்குமான நிலையம், விவசாயத் தகவல் மற்றும் தொடர்பாடல்களுக்கான தேசிய நிலையம், சமூகப் பொருளியல் திட்டமிடல் நிலையம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் ஆகிய ஆறு தொழில்நுட்பச் சேவை நிலையங்ளையும் திணைக்களத்தின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்றக்கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவோடு பொறியியல் பிரிவு, நிதிப் பிரிவு, நிர்வாகப்பிரிவு ஆகிய மூன்று துணைச் சேவை அலகுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலை இலட்சியம், பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தொலை இலட்சியம்:தேசத்தின் சௌபாக்கியத்திற்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்.

பணிக்கூற்று:மேம்படுத்தப்பட்டவிவசாயத் தொழில்நுட்பங்ளை அபிவிருத்தி செய்து அவற்றை பரப்புவதுடன் விவசாயிகளை மையப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் தேசத்தின் உணவு, போசணைப் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய, நிலைபேறான, சமத்துவமான விவசாய அபிவிருத்தியை அடைதல்.

குறிக்கோள்கள்:


- உணவுப் பயிர்ச் செய்கைக்கான உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
- நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான கமத்தொழிலினை உறுதிப்படுத்தல்.
- நிலைபேறான பயிர்ச் செய்கையை உறுதிப்படுத்தல்.
- தொழிலாளர், காணி ஆகியவற்றின் பயன்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல்.
- விவசாயத் துறையில் அனைத்து பங்குதாரர்களையும் வலிமைப்படுத்தல்.
- விவசாயத் துறையில் மனிதவள ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- தரமான விதை, நடுகைப் பொருட்கள் பங்குதாரர்களிற்குக் கிடைக்கும் தன்மையை உறுதி செய்தல்.
- நில, நீர் வளங்களை உகந்த அளவில் பயன்படுத்தல்.
- திட்டமிடல், கொள்கைத் தீர்மானங்கள், கொள்கை வழிகாட்டல் ஆகியவற்றிற்கு உதவுதல்.
- விதை, நடுகைப் பொருட்கள், விவசாய உற்பத்திகளின் தர நியமங்களை உறுதி செய்தல்.
- நாட்டின் தாவர இனங்களை தீங்கு விளைவிக்கும்அந்நிய இனங்களிலிருந்து பாதுகாத்தல்.

- விவசாய உற்பத்திகளுக்கான அந்நியச் செலாவணியை அதிகரிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள், தாவர உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான வசதிகளை செய்து கொடுத்தல்.
- சுற்றாடலையும், பொது மக்களையும் பீடைநாசினிகளின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.
- தாவரக் கரு மூளவளங்களின் நிலைபேறான பயன்பாட்டினை உறுதி செய்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

- காய்கறிகள்,பழங்கள், நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்தித் தோற்றுவாய்களை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு விவசாய ஆராய்ச்சியின் ஊடாக பொருத்தமான புதிய இனங்கள் மற்றும் விவசாயத் தொழிநுட்பங்களைத் தோற்றுவித்தல்
- பல்வேறு விவசாய விரிவாக்கல் வழிமுறைகளைப் பயன்படுத்தி விருத்தியடைந்த விவசாயத் தொழிநுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்.
- காய்கறிகள்,பழங்கள், நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்கள் உட்பட உணவுப் பயிர்களின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்தல், அத்தாட்சிப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் என்பவற்றின் ஊடாக தரப்பினர்களுக்கு தரமான நிலையில் உள்ள விதைகள் எளிதாகக் கிடைக்கும் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- நிலையான வகையில் பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பான உறுதிப்படுத்துலுக்காக பயிர் மரபணு வளங்களைப் பாதுகாத்தல்.
- உற்பத்தியின் விளைதிறனை அதிகரிப்பதற்காக காணிகள் மற்றும் நீர் வளங்களை சிறந்த மட்டத்தில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.
- தேசிய தாவரங்களைப் பாதிக்கும் வெளிநாட்டு இனங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- விவசாய உற்பத்திகளின் ஊடாக அந்நியச் செலாவணியினை அதிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- பீடைநாசினிகளின் பாதகமான தாக்கங்களில் இருந்து பொதுமக்களையும் மற்றும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மண் பாதுகாப்புச் சட்டம், பயிர்ப் பாதுகாப்புச் சட்டம், மரங்கள் வெட்டுவதனைக் கட்டுப்படுத்தும் சட்டம், பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் விதைகள் சட்டம் என்பவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான விவசாயத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விவசாயத் துறைக்கு சேவைகளை வழங்குவதற்குத் தேவையான மூன்றாம் நிலை தேர்ச்சியினைக் கொண்ட நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலான மனித வளத்தைத் தோற்றுவிப்பதற்காக விவசாயக் கல்வியின் ஊடாக விவசாயம் தொடர்பான தேசிய தொழில் சார் பயிற்சிகள் (NVQ) 5 மற்றும் 6 மட்டத்திலான டிப்ளோமாப் பாடநெறிகளைப் பேணி வருதல், விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்கு அவசியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

1.4 நிறுவன விளக்கப்படம் - விவசாயத் திணைக்களம்



(நெ.ஆ.அ..நி) -நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(வ.ப.ஆ.அ.நி.) -வயற்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம்
(பூ.ப.ஆ.அ.நி) -பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(ப.ஆ.அ.நி.) -பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
(இ.வ.மு.நி.) -இயற்கை வள முகாமைத்துவ நிலையம்
(ச.பொ.தி.நி.) -சமூகபொருளியல், திட்டமிடல் நிலையம்
(வி.ந.பொ.அ.நி) -விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம்
(வி.அ.தா.பா.நி) -விதை அத்தாட்சிப்படுத்தல் தாவரப்பாதுகாப்பு நிலையம்
(வி.ப.நி) -விரிவாக்கல் பயிற்சி நிலையம்
(தே.வி..த.தொ.நி.) -தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம்
(மு.க.ம.அ) -முன்னேற்ற கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகு

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1.5.1 விவசாயப் பணிப்பாளர் நாயக அலுவலகம்

1.5.2 மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயக (ஆராய்ச்சி) அலுவலகம் – பேராதனை

1.5.3 மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயக (அபிவிருத்தி) அலுவலகம் – பேராதனை

1.5.4 மேலதிக பணிப்பாளர் நாயக (நிருவாக) அலுவலகம் – பேராதனை

1.5.5 பிரதான நிதி உத்தியோகத்தர் அலுவலகம் - பேராதனை

1.5.6 நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் – பத்தலகொடை

- 1.5.6.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் - போம்புவெல
- 1.5.6.2 நெல் ஆராய்ச்சி நிலையம் – அம்பலாநதோட்டை.
- 1.5.6.3 நெல் ஆராய்ச்சி நிலையம் - பெந்தோட்டை
- 1.5.6.4 நெல் ஆராய்ச்சி நிலையம் - லபுதுவ
- 1.5.6.5 நெல் ஆராய்ச்சி நிலையம் - சம்மாந்துறை
- 1.5.6.6 நெல் ஆராய்ச்சி நிலையம் - பரந்தன்
- 1.5.6.7 நெல் ஆராய்ச்சி நிலையம் - முருங்கன்

1.5.7 வயற்பயிர்ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - மஹாஇலுப்பள்ளம

- 1.5.7.1 தானிய அவரை எண்ணெய் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் - அங்குணகொலபெலஸ்ஸ
- 1.5.7.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - அரலகன்வில
- 1.5.7.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - கிளிநொச்சி
- 1.5.7.4 பிரதேச விவசாய ஆராய்ச்சி நிலையம் - கரடியனாறு
- 1.5.7.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் - வவுனியா
- 1.5.7.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் - திருநெல்வேலி
- 1.5.7.7 விவசாய ஆராய்ச்சி நிலையம் - தெலிஜ்ஜவில
- 1.5.7.8 விவசாய ஆராய்ச்சி நிலையம் - வீரவில
- 1.5.7.9 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் - மஹாஇலுப்பள்ளம

1.5.8 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - கன்னொறுவை

- 1.5.8.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பண்டாரவளை
- 1.5.8.2 விவசாய ஆராய்ச்சி நிலையம் - சீதாஎலிய
- 1.5.8.3 விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிராந்துருகோட்டை
- 1.5.8.4 உணவு ஆராய்ச்சிப்பிரிவு – கண்ணொறுவ
- 1.5.8.5 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி நிலையம் – கற்பிட்டி
- 1.5.8.6 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சிப்பண்ணை – கண்னொறுவை
- 1.5.8.7 இயைபாக்க ஆராய்ச்சிப்பிரிவு - வாகொல்ல
- 1.5.8.8 இயைபாக்க ஆராய்ச்சிப்பிரிவு - திப்பட்டுமுல்ல
- 1.5.8.9 இயைபாக்க ஆராய்ச்சிப்பிரிவு - வாரியபொல
- 1.5.8.10 இயைபாக்க ஆராய்ச்சிப்பிரிவு - தப்போவ

1.5.9 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - ஹொரன

- 1.5.9.1 நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் - மாகந்துர
- 1.5.9.2 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் - கண்ணொறுவ
- 1.5.9.3 தாவர வைரசு அடையாள நிலையம் - ஹோமாகம
- 1.5.9.4 விவசாய ஆராய்ச்சி நிலையம் - மதுருகெட்டிய
- 1.5.9.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் - முதுகண்டிய
- 1.5.9.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் - இரஹங்கல
- 1.5.9.7 பழப்பயிர் ஆராய்ச்சி பண்ணை - எரமிணிகொல்லை
- 1.5.9.8 சிட்ரஸ் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் - பிபிலை
- 1.5.9.9 தேசிய பழ வர்க்க பாதுகாப்பு நிலையம் - குண்டசாலை

1.5.10 இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் – பேராதனை

1.5.10.1 மண் வளப் பாதுகாப்பு அறிவு முகாமை மையம் - குண்டசாலை

1.5.10.2 இயற்கை வளங்கள் முகாமை மற்றும் மண் வளப் பாதுகாப்பு மாதிரி அலகு - குண்டசாலை

1.5.11 சமூக பொருளியல், திட்டமிடல் நிலையம் - பேராதனை

1.5.12 விரிவாக்கம், பயிற்சி நிலையம் - பேராதனை

1.5.12.1 சேவைக்கால பயிற்சி நிலையம் – அங்குணகொலபெலஸ்ஸ

1.5.12.2 சேவைக்கால பயிற்சி நிலையம் – கன்னொறுவ

1.5.12.3 சேவைக்கால பயிற்சி நிலையம் – ஹன்சயாபாலம

1.5.12.4 பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் – அநுராதபுரம்

1.5.12.5 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – அட்டாளைச்சேனை

1.5.12.6 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – அம்பாறை

1.5.12.7 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – பொலன்னறுவ

1.5.12.8 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – வீரவில

1.5.12.9 விவசாயக் கல்லூரி –அங்குணகொலபெலஸ்ஸ

1.5.12.10 விவசாயக் கல்லூரி - கரபிஞ்ச

1.5.12.11 விவசாயக் கல்லூரி–குண்டசாலை

1.5.12.12 விவசாயக் கல்லூரி–பெல்வெஹெர

1.5.12.13 விவசாயக் கல்லூரி–வவுனியா

1.5.12.14 விவசாயக் கல்லூரி–அநுராதபுரம்

1.5.12.15 விவசாயக் கல்லூரி–லபுதுவ

1.5.7.16 விவசாயக் கல்லூரி–பாலமுனை

1.5.12.17 விவசாயக் கல்லூரி–பரந்தன்

1.5.12.18 விவசாயக் கல்லூரி–வாரியபொல

1.5.12.19 விவசாயக் கல்லூரி–பிபிலை

1.5.12.20 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) - அம்பாறை

1.5.12.21 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) - அநுராதபுரம்

1.5.12.22 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) - ஹம்பாந்தோட்டை

1.5.12.23 பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) - ஹசலக

1.5.12.24 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) - மொனராகலை

1.5.12.25 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம் (மாகாணங்களிற்கு இடைப்பட்டது) – பொலன்னறுவ

1.5.12.26 தேனீ வளர்ப்பு அபிவிருத்திப் பிரிவு - பிந்துனுவெவ - பண்டாரவளை

1.5.12.27 இளம் விவசாயிகள் கழகம் – தலைமையகம் - பேராதனை

1.5.12.28 விவசாய வியாபார அபிவிருத்திப் பிரிவு - கன்னொறுவை

1.5.12.29 பொருளாதார மத்திய நிலையம் - தம்புள்ளை

1.5.13 தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம் – கன்னொறுவை

1.5.13.1 விவசாய பிரசுர வெளியீட்டு அலகு – கன்னொறுவ

1.5.13.2 விவசாய பிரசுர வெளியீட்டு விற்பனை நிலையம் – பேராதனை

1.5.13.3 பண்ணை ஒலிபரப்பு சேவை - கொழும்பு

1.5.13.4 பண்ணை ஒலிபரப்பு சேவை - கண்டி

1.5.13.5 பண்ணை ஒலிபரப்பு சேவை - அநுராதபுரம்

1.5.13.6 பண்ணை ஒலிபரப்பு சேவை - மாத்தறை

1.5.13.7 விவசாய வானொலி சேவை - திருநெல்வேலி

1.5.13.8 விவசாய தொழில்நுட்ப பூங்கா – கன்னொறுவ

1.5.13.9 விவசாய தொழில்நுட்ப பூங்கா – பட்டஅத

1.5.13.10மத்திய விவசாய நூலகம் – கன்னொறுவை

1.5.13.11சூழல் நேயம் விவசாய அலகு - தியகம

1.5.14 விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் – பேராதனை

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) - அலுத்தரம

1.5.14.2 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – அம்பாறை

1.5.14.3 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – பட்டஅத

1.5.14.4 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – நாராஹேன்பிடிய

1.5.14.5 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) - கந்தளாய்

1.5.14.6 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) –கிளிநொச்சி

1.5.14.7 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – குண்டசாலை

1.5.14.8 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – மஹாஇலுப்பள்ளம

1.5.14.9 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) –நிக்கவெரட்டிய

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) –சீதாஎலிய

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – பெல்வெஹெர

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – பொலன்னறுவ

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) - தெலிஜ்ஜவில

1.5.14.1 பிரதிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) - வவுனியா

1.5.14.1 உதவிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) – கரடியனாறு

1.5.14.1 உதவிப்பணிப்பாளர் அலுவலகம்(வி.ந.பொ) – முருங்கன்

1.5.14.1 உதவிப்பணிப்பாளர்அலுவலகம்(வி.ந.பொ) - யாழ்ப்பாணம்

1.5.14.1 அரசவிதைப்பண்ணை – அலுத்தரம

1.5.14.1 அரசவிதைப்பண்ணை – அம்பலாந்தோட்டை

1.5.14.2 அரசவிதைப்பண்ணை – அம்பேபுஸ்ஸ

1.5.14.2 அரசவிதைப்பண்ணை – மஹாஇலுப்பல்லம

1.5.14.2 அரசவிதைப்பண்ணை - கந்தளாய்

1.5.14.2 அரசவிதைப்பண்ணை – மித்தெனிய

1.5.14.2 அரசவிதைப்பண்ணை - பொலன்னறுவ

1.5.14.2 அரசவிதைப்பண்ணை –மல்வத்த, அம்பாறை

1.5.14.2 அரசவிதைப்பண்ணை - முருங்கன்

1.5.14.2 அரசவிதைப்பண்ணை - கரடியனாறு

1.5.14.2 அரசவிதைப்பண்ணை - பரந்தன்

1.5.14.29 அரசவிதைப்பண்ணை – குண்டசாலை

1.5.14.30 அரசவிதைப்பண்ணை - மீபிலிமான

1.5.14.31 அரசவிதைப்பண்ணை - ரஹங்கல

1.5.14.32 அரசவிதைப்பண்ணை – உடரதெல்ல

1.5.14.33 அரசவிதைப்பண்ணை - சீதாஎலிய

1.5.14.34 அரசவிதைப்பண்ணை – படஅத்த

1.5.14.35 அரசவிதைப்பண்ணை – கந்தபொல

1.5.14.36 அரசவிதைப்பண்ணை - பீதுருதாலகால

1.5.14.37அரசவிதைப்பண்ணை - வல்பிட

1.5.14.38அரசவிதைப்பண்ணை - உள்பதகம

1.5.14.39அரசவிதைப்பண்ணை – பண்டாரகம

1.5.14.40அரசவிதைப்பண்ணை - தெலிஜ்ஜவில

1.5.14.41அரசவிதைப்பண்ணை – பெல்வெஹெர

1.5.14.42அரசவிதைப்பண்ணை – இங்கினிமிடிய

1.5.14.43அரசவிதைப்பண்ணை - வீரபான

1.5.14.44அரசவிதைப்பண்ணை – எலுவங்குளம்

1.5.14.45பழப் பயிர் ஆராய்ச்சிப் பண்ணை – அம்பதென்ன

1.5.14.46 விவசாய விதை விற்பனை நிலையம் - கொழும்பு 07

1.5.14.47 மரக்கறி விதை நிலையம் - கன்னொறுவை

1.5.14.48 விதை போஞ்சி அலகு - ரிகில்லகஸ்கட
1.5.14.49 விவசாய விதை விற்பனை நிலையம் - மாத்தறை
1.5.14.50 விவசாய விதை விற்பனை நிலையம் - மஹாஇலுப்பள்ளம
1.5.14.51 விவசாய விதை விற்பனை நிலையம் - பத்தலகொட
1.5.14.52 விவசாய விதை விற்பனை நிலையம் - வாகொல்லை
1.5.14.53 விவசாய விதை விற்பனை நிலையம் - மதுருகெடிய
1.5.14.54 விவசாய விதை விற்பனை நிலையம் - பண்டாரவெல
1.5.14.55 விவசாய விதை விற்பனை நிலையம் - பரந்தன்
1.5.14.56 விவசாய விதை விற்பனை நிலையம் - பொலொன்னறுவை
1.5.14.57 விவசாய விதை விற்பனை நிலையம் - அலுத்தரம
1.5.14.58 விவசாய விதை விற்பனை நிலையம் - அம்பலந்தோட்டை
1.5.14.59 விவசாய விதை விற்பனை நிலையம் - குண்டசாலை
1.5.14.60 விவசாய விதை விற்பனை நிலையம் - நிகவேரட்டிய
1.5.14.61 விவசாய விதை விற்பனை நிலையம் - பட்டஅத்த
1.5.14.62 விவசாய விதை விற்பனை நிலையம் – கன்னொறுவை
1.5.14.63 விவசாய விதை விற்பனை நிலையம் – அத்தனகல்ல
1.5.14.64 விவசாய விதை விற்பனை நிலையம் – மதுருகெடிய
1.5.14.65 விதை உருளைக் கிழங்கு - சீதாஎளிய
1.5.14.66 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - அபேபுஸ்ஸ
1.5.14.67 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - வல்பிட
1.5.14.68 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -கொழும்பு 05
1.5.14.69 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - பஸ்யால
1.5.14.70 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - பத்தரமுல்ல
1.5.14.71 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - அம்பாறை
1.5.14.72 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - கரன்தியனாறு
1.5.14.73 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - இகினிமிடிய
1.5.14.74 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - யடியன
1.5.14.75 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -பெல்வெஹெர
1.5.14.76 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -தெலிஜ்ஜவில
1.5.14.77 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - கல்தோட்டை
1.5.14.78 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - வீரபான
1.5.14.79 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - புத்தளம்
1.5.14.80 மேலதிக உணவு பயிர் விதை களஞ்சியம் - இரஹங்கல, பொரலன்த

1.5.15 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம் – கன்னொறுவ
1.5.15.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை – கன்னொறுவ
1.5.15.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - அலுத்தரம
1.5.15.1.2 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - படஅத
1.5.15.1.3 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மஹாஇலுப்பள்ளம
1.5.15.1.4 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - நிகவெரட்டிய
1.5.15.1.5 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -பெல்வெஹெர
1.5.15.1.6 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -பொலொன்னறுவை
1.5.15.1.7 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பிபில
1.5.15.1.8 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - ஹிகுரக்கொட
1.5.15.1.9 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - கன்தலே
1.5.15.1.10 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - குண்டசாலை
1.5.15.1.11 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - சீதாஎலிய
1.5.15.1.12 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை- அம்பாறை
1.5.15.1.13 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பத்தலகொட
1.5.15.1.14 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மட்டக்களப்பு
1.5.15.1.15 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -கொழும்பு

1.5.15.1.16 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - லபுதுவ
1.5.15.1.17 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - முருன்கன்
1.5.15.1.18 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பெல்மடுல்ல
1.5.15.1.19 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - ரிகில்லகஸ்கட
1.5.15.1.20 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - வவுனியா
1.5.15.1.21 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மாத்தறை
1.5.15.1.22 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மதுகம
1.5.15.1.23 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - யாழ்ப்பாணம்
1.5.15.1.24 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பரன்தன்
1.5.15.1.25 விதை ஆராய்ச்சி பிரிவு - பேராதனை
1.5.15.1.26 விதை ஆராய்ச்சி பிரிவு - மஹாஇலுப்பள்ளம
1.5.15.1.27 விதை ஆராய்ச்சி பிரிவு - அலுத்தரம
1.5.15.1.28 விதை ஆராய்ச்சி பிரிவு - படஅத்த
1.5.15.1.29 விதை ஆராய்ச்சி பிரிவு - பரன்தன்
1.5.15.1.30 பிற்கட்டுப்பாட்டு அலகு I - கன்னொறுவை
1.5.15.1.31 பிற்கட்டுப்பாட்டு அலகு II - கன்னொறுவை
1.5.15.1.32 பிற்கட்டுப்பாட்டு அலகு - சீதாஎலிய
1.5.15.1.33 பிற்கட்டுப்பாட்டு அலகு - மஹாஇலுப்பள்ளம
1.5.15.1.34 பிற்கட்டுப்பாட்டு அலகு - கரதியனாறு
1.5.15.1.35 பிற்கட்டுப்பாட்டு அலகு விதை நூதனசாலை - பட்டஅத
1.5.15.1.36 விதை சுகாதார அலகு – கன்னொறுவை

1.5.15.2. தாவரப்பாதுகாப்புச் சேவை – கன்னொறுவ
1.5.15.2.1 தாவரப் பாதுகாப்புச் சேவை - மஹாஇலுப்பள்ளம
1.5.15.2.2 தாவரப் பாதுகாப்புச் சேவை - போம்புவல, களுத்துறை

1.5.15.3 பீடைகொல்லிப் பதிவாளர்அலுவலகம் - பேராதனை

1.5.15.4 தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையம் - கன்னொறுவ

1.5.15.5 தேசியதாவரதடுப்புக்காப்புசேவை – கட்டுநாயக்க
1.5.15.5.1 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு - கன்னொறுவை
1.5.15.5.2 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு – விமானநிலையம்,கொழும்பு
1.5.15.5.3 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு - விமானநிலையம், மத்தள
1.5.15.5.4 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு – கொழுப்புத் துறைமுகம்
1.5.15.5.5 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு - ஹம்பாந்தோட்டை துறைமுகம்
1.5.15.5.6 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு -விமானநிலையம், யாழ்பாணம்
1.5.15.5.7 தாவர தடுப்புக் காப்புச் சேவை அலகு - மத்திய தபால் பரிமாற்றம்

1.5.16 நிர்வாக அலகு - பேராதனை

1.5.17 தாபனப் பிரிவு - பேராதனை

1.5.18 பொறியியளாளர் பிரிவு - பேராதனை
1.5.18.1பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - குண்டசாலை
1.5.18.2பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் -பொலொன்னறுவை
1.5.18.3பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - அகுணுகொலபெலெஸ்ஸ
1.5.18.4பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - சீதாஎளிய

1.5.19 நிதிப்பிரிவு - பேராதனை

1.5.20 உள்ளக கணக்காய்வுப் பிரிவு - பேராதனை

1.5.21 முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு - பேராதனை

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்/ நிதியங்கள்:

இல்லை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

திட்டத்தின் பெயர்	நன்கொடை நிறுவனம்	மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா.மி)	காலம்
1. AFACI உறுப்பு நாடுகளுக்கு ஏற்ற அழுத்தத்தைத் தாங்கும், அதிக விளைச்சல் தரக்கூடிய அரிசி வகைகள் மற்றும் மதிப்புச் சேர்க்கும் வகையிலான முளைமக்கூழ் பயன்பாடு (கொய்யா)	AFACI	12.672	2022 - 2024
2. ஆசிய பிராந்தியத்தில் புலம்பெயர் பூச்சி பீடைகளுக்கான தடுப்பு வலையமைப்பை நிறுவுதல்	AFACI	3.86	2019 - 2022
3. ஆசியாவில் காய்கறிவளர்ப்புத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல்	AFACI	9.436	2020 - 2023
4. இலங்கையின் உலர்வலயத்தில் உயர்தர பெரிய வெங்காய உற்பத்தி மாதிரி கிராமங்களின் அபிவிருத்தி	KOPIA	6.089	2021 - 2023
5. இலங்கையில் வணிக உற்பத்திக்கான மாண்டரின்/நாரந்தை மாதிரி கிராமத்தின் அபிவிருத்தி	KOPIA	3.742	2021 - 2023
6. காளான் உற்பத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் விதமாக உற்பத்தி மற்றும் பயன்பாட்டுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்	KOPIA	9.359	2017 - 2023
7. விவசாய உற்பத்திகளின் செயலாக்க தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல்	AFACI	1.011	2019 - 2023
8. இலங்கையின் உணவுப்பயிர்களில் *Helicoverpa*spp என்ற வெட்டுப்புழுவைக் கட்டுப்படுத்துவதில் Nucleo polyhedron வைரசுகளின் (NPV) செயற்பாட்டுத்திறனை மதிப்பிடல்	USDA	1.193	2020 - 2023
9. உயிரியல்-பூச்சி பீடை கொல்லிகளை ஊக்குவிப்பதன் மூலம் ஆசியாவில் பூச்சிக்கொல்லி எச்சத்தின் அளவைத் தணித்தல்	APAARI	1.278	2021 - 2023
10. நைதரசன் மாசு மூலங்களின் மதிப்பீடு, சுற்றுச்சூழல் பேண்தகு நிலை மீதான தாக்கங்கள், இலங்கையில் உள்ள மூன்று தனித்துவமான மாசுப்பிரதேசங்களில் மனித ஆரோக்கியம் மற்றும் அது சார்ந்த தீர்வு நடவடிக்கைகள்	IAEA	0.486	2019 - 2023

11. இலங்கையின் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மலைப்பாங்கான விவசாய நீர்நிலைகளுக்கு விவசாய மாசுபாடுகளை கொண்டு சேர்க்கும் விதம் மற்றும் அவற்றின் மூலங்கள் என்பவற்றை கண்டறிதல்	IAEA	0.883	2018 - 2023
12. ஆசியாவின் மண்பூகோள வரைபடம் மற்றும் தேசிய மண் தகவல் அமைப்பை அபிவிருத்தி செய்தல்	AFACI	9.753	2019 - 2023
13. தெற்காசியாவில் காலநிலை தகவுடைய விவசாயத்தை அதிகரிக்கச் செய்வதற்கான கூட்டமைப்பு	SDF	6.548	2022 - 2024
14. தெற்காசிய விவசாய தழுவல் வரைபடம்: காலநிலை அபாயங்கள், நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுக்கு இடையேயான இடைத்தொடர்புகள்	BISA	1.061	2023 - 2024
15. ஆசிய பிராந்திய படைப்புழு மற்றும் புகையான் நோயறிதல், கண்காணிப்பு மற்றும் அவதானிப்புத்திட்டம்	AFACI	0.661	2023 - 2026
16. தாவர வாரியான நிரந்தர பயிர் சிகிச்சைத்திட்டம்	CABI	3.206	2022 - 2024
17. மதிப்புச்சங்கிலி மேம்பாட்டில் கவனம் செலுத்துவதனூடாக சிறிய அளவிலான விவசாய வணிகத்தின் மூலம் SAARC பிராந்தியத்தில் சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைமேம்படுத்துதல்	SDF	4.484	2018 - 2023
18. ஆசியாவில் கிராமப்புற விவசாய தொழில்நுட்ப விரிவாக்க அமைப்பை(RATES) மேம்படுத்துதல்	AFACI	4.280	2023 - 2025

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

விஷேட வெற்றிகள்

நெல்

- இரும்பு நச்சாக்கத் தன்மையை எதிர்க்கும் நெல் இன வகைகளை இனப்பெருக்கம் செய்வதில், பசுமை இல்லங்களில் மண்ணிலி நீர் வளர்ப்பியல் ஊடகத்தைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் இரும்பு நச்சாக்கத்தை எதிர்க்கும் வர்க்கங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை கண்டறியப்பட்டது.
- மண்ணில் இயற்கையாக காணப்படும் பூஞ்சையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களைப் பயன்படுத்தி நெற்பயிர்ச்செய்கைக்கு இட வேண்டிய பொசுபரசு உரத்தின் அளவைக் குறைக்கலாம் என்பதாக ஆராய்ச்சி உறுதிப்படுத்தியுள்ளதோடு இதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் வறண்ட பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட இருபத்தி ஒரு நெல் முன்னோடிகள்/சந்ததிகள் மூன்று பயிர்ச் செய்கை பருவங்களிலும் நாட்டின் வெவ்வேறு விவசாய காலநிலை வலயங்களில் அதன் தகவமைப்புத் தன்மைக்காக பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றில் மூன்று முன்னோடிகள்/சந்ததிகள் விவசாயிகளின் களப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- விவசாய வயல்களில் பாரிய அளவில் பயன்பாட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நெல் வகையான Bg16-2022 வர்க்கமானது வர்க்கங்கள் வெளியீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- Drone- ஆளில்லா வான்கல தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களில் களைகளைக் கண்டறிதல் மற்றும் குறித்த இடங்களில் களைக்கொல்லிகளை பயன்படுத்தல் குறித்த பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

துணை உணவுப் பயிர்கள்

- கீழ் வரும் புதிய ரகங்கள் சாதாரண பொதுவான பயிர்ச் செய்கைக்கு பரிந்துரைக்கப்பட்டன.
    - MI Hp1 – முதல் திறந்த மகரந்தச் சேரக்கை / இயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்பட்ட குடை மிளகாய் (Capsicum chinense) ரகமானது பொதுவான பயிர்ச் செய்கைக்காக பரிந்துரைக்கப்பட்டது. இது மிளகாய் இலை கருகல் மற்றும் வைரஸுகளுக்கு மிதமான எதிர்ப்பைக் காட்டுவதோடு ஒரு ஹெக்டயாரில் சராசரியாக 20 - 25 டன் tp விளைச்சலை அளிக்கிறது.
    - ANKM1 - இது வறண்ட மற்றும் மிதவெப்ப மண்டலங்களில் பயிர் செய்ய ஏற்ற ஒரு கடுகு ரகமாகும். இந்த கடுகு ரகமானது ஒரு ஹெக்டயாரில் சராசரியாக 800 கிலோ விளைச்சலை தருவதோடு 90-100 நாட்களில் முதிர்ச்சியடையக்கூடியது.
- 5 கிராம் டிரைக்கோடெர்மா அடிப்படையிலான உயிர் பூச்சிக்கொல்லி மருந்தை பயன்படுத்தி விதைகளுக்கு சிகிச்சையளிப்பதன் மூலம் வெங்காயம் மற்றும் மிளகாயில் ஏற்படும் நாற்றழுகல் நோயினை திறம்பட கட்டுப்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டது.
- டிரைக்கோடெர்மா கலவையை வெங்காயக் குமிழ்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் ஆரம்பகால குமிழ் அழுகல் நோய் மற்றும் ஆந்த்ராக்னோஸ் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம்.
- பாதுகாப்பு/வளம் பேணல் விவசாயத்தின் ஒன்றோடொன்று இடைத்தொடர்புடைய மூன்று கோட்பாடுகளின் மூலம் நிலத்தின் உற்பத்தித் திறனை செம்மையாக்க முடியும் என்பதாக ஒரு நீண்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. பாதுகாப்பு/வளம் பேணல் விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சோயா அவரை பயிர்ச்செய்கையானது சிறந்த பலனைத் தந்ததோடு பாதுகாப்பு/வளம் பேணல் விவசாயம் மற்றும் பாரம்பரிய விவசாயம் ஆகிய இரண்டிலும் கொள்ளு பயிர்ச்செய்கையானது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. கேழ்வரகு/குரக்கன் பயிர்ச்செய்கையை பொருத்தமட்டில் பாரம்பரிய முறையுடன் ஒப்பிடும் போது பாதுகாப்பு/வளம் பேணல் விவசாயத்தில் அதன் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (சுமார் 43%)காணப்பட்டது.

- பெரும் போகத்தில் உயர்ந்த நாற்று மேடைகளில் பயிரிடப்பட்ட சிலோன் ஜம்போ பெரிய-விதை கொண்ட நிலக்கடலை ரகமானது வரப்பு மற்றும் சால் நடவை முறையை விடவும் அதிக விளைச்சலை (சுமார் 16%) தருவதாக கண்டறியப்பட்டது. பயிர் பூக்கும் நேரத்தில் ஒரு ஹெக்டயாருக்கு 200 கிலோ கிராம் ஜிப்ஸம் உப்பு சேர்ப்பதன் மூலம் செயற்கை உர பரிந்துரையை விட 17% அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.

- சோளம், நிலக்கடலை மற்றும் உளுந்து ஆகியவற்றுடன் ஊடுபயிராக தோரை பருப்பைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் சிறு மற்றும் பெரும் போகம் ஆகிய இரு போகங்களில் நிலக்கடலையுடனும் சிறு போகத்தில் உளுந்துடனும் பயிர் செய்வதன் மூலம் நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும் என்பதாக கண்டறியப்பட்டது. தோரை பருப்புடன் ஊடுபயிராக பயிரிடப்பட்ட சோளம் இரு பருவங்களிலும் நன்றாக விளைந்தது. ஆனாலும் சோளப் பயிரின் நிழல் மற்றும் விரைவான வளர்ச்சி காரணமாக தோரை பருப்பின் விளைச்சல் பெருமளவில் குறைந்தது.

- பாதகமான ஈரப்பதனான சூழ்நிலையில் ஆவியுயிர்ப்புத் தடுப்பிகள் (Kaolin மற்றும் Salicylic அமிலம்) பயன்படுத்தப்படுவதன் மூலம் சோளத்தின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் அவை எவ்வித விளைவையும் ஏற்படுத்தவில்லை என்பது தெரிய வந்தது.

- சேதனப் பசளை மற்றும் கனிம உரங்கள் என்பவற்றை (1:1) என்ற விகிதாசாரத்தில் ஒருங்கிணைத்து இடுவதன் மூலம் இலங்கையின் உலர் வலயத்தில் ரைசோபியம் உட்பாய்ச்சப்பட்ட சோயா அவரையில் 1.2 என்ற மிக உயர்ந்த இலைப்பரப்புச் சுட்டியை (LAI) காட்டியதுடன், ஒரு ஹெக்டயாருக்கு 2.8 டன் தானிய விளைச்சலையும் பெற முடிந்தது.

- சூரிய சக்தியில் இயங்கும் நீர் உந்தி நுண்ணீர்ப்பாசன அமைப்பில் சூரிய சக்தியில் இயங்கும் தானியங்கி நீர்க்கட்டுப்பாட்டு அலகின் ஒரு முன்மாதிரியானது வெற்றிகரமாக களத்தில் பரீட்சிக்கப்பட்டது.

- பெரிய அளவிலான சோள பயிரச் செய்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கான முன்மாதிரி 4-சக்கர டிராக்டரின் வடிவமைப்பு மற்றும் அதன் மேம்பாட்டு நடவடிக்கை வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

- 2- சக்கர டிராக்டரில் பொருத்தப்படும் வரப்பு வெட்டும் இயந்திர முன்மாதிரியின் மேம்பாட்டு மற்றும் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவுற்றது.

<u>தோட்டப் பயிர்கள்</u>

காய்கறிகள்

- கீழ்க் காணும் புதிய மரக்கறி ரகங்கள் பரிந்துரைக்கப்பட்டன
    - GKOKHY- 03, GKOKHY- 04: தீவு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற அதிக விளைச்சலைத் தரும் 02 புதிய கலப்பினவெண்டிக்காய் வகைகள் ஆகும்.
    - ரண்கவடி(TJ01): கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு உகந்த புதிய மரவள்ளிக் கிழங்கு வகையாகும்.
- கீழ்க் காணும் மரக்கறி ரகங்கள் சில நிபந்தனைகளுடன் பரிந்துரைக்கப்பட்டன
    - கலப்பின கத்தரிக்காய் (HORDIEGH-04): தீவு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற அதிக விளைச்சலைத் தரும் வகையாகும்.
    - வெள்ளரிக்காய்(HORDI CU- 04): தீவு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற அதிக விளைச்சலைத் தரும் வகையாகும்.
- வற்றாளை / சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிர்ச் செய்கையின் பிரதானமான பிரச்சினையான நடவுப் பொருட்கள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, சாப்பிட முடியாத, சிறிய கிழங்குகளைப் பயன்படுத்தி நடவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றைப் பாதுகாத்து அடுத்த பருவத்துக்குப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.

- தீவு முழுவதும் தொற்றுநோய் போல பரவியுள்ள தென்னந்தோப்புகளில் உள்ள வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த தாவர பாதுகாப்புச் சேவையுடன் ஒருங்கிணைந்து 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ஒரு நிலையான தீர்வாக வெள்ளை ஈக்களுக்கான *Encarsia gaudeloupea* எனப்படும் ஒட்டுண்ணி அடையாளம் காணப்பட்டு அவை சூழலுக்கு விடுவிக்கப்பட்டன. இவை தற்போது அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு தொழில்நுட்பத்தின் கீழ் பெருக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் உள்ள தெங்கு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதுடன் 2023 ஆம் ஆண்டு 2,48,350 ஒட்டுண்ணிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டன.

- கத்தரிக்காய் மற்றும் மிளகாய் ஆகிய பயிர்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளின் அதிகபட்ச எச்ச வரம்புகள் மற்றும் அறுவடைக்கு முந்தைய காலத்தை நிர்ணயம் செய்வதன் மூலம் தரமான காய்கறி உற்பத்திக்கு பங்களிப்பு செய்யப்பட்டது.
- உணவுத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோர் மற்றும் புதிய தொழில்முனைவோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை பகுப்பாய்வு செய்து அதன் மூலம் தரமான உணவை சந்தைக்கு வெளியிடும் வகையில் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக 151 ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகள் வெளியிடப்பட்டன.
- காய்கறிகளின் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் தொடர்பாக 396 தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் புதிய தொழில்முனைவோர் பலர் உருவாக்கப்பட்டு உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த ஆதரவு வழங்கப்பட்டது.

பழங்கள்

- கீழ் வரும் புதிய பழப்பயிர் வர்க்கங்கள் பொதுவான பயிர்ச் செய்கைக்கு பரிந்துரைக்கப்பட்டன
    - அங்குனகொலபெலெஸ்ஸ மெங்கோ 1 (சிவப்பு நிறமானது) – 250 கிராம் அளவு எடையுடைய சாதாரண அளவிலான ஒரு மாம்பழ வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிருந்து 50-55 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
    - அங்குனகொலபெலெஸ்ஸ மெங்கோ 1 (ஹனி போல்) – 250 கிராம் அளவு எடையுடைய நடுத்தர அளவிலான ஒரு மாம்பழ வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிலிருந்து 30-35 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
    - அங்குனகொலபெலெஸ்ஸ மெங்கோ 3 (கஹ எத் தல) –360 கிராம் அளவு எடையுடைய செம்மஞ்சல் நிறத்திலான உள்ளீட்டைக் கொண்ட சாதாரண அளவிலான ஒரு மாம்பழ வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிலிருந்து 30-35 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
    - அங்குனகொலபெலெஸ்ஸ மெங்கோ 4 (கிரீன்றோ) –390 கிராம் அளவு எடையுடைய கடும் செம்மஞ்சல் நிறத்திலான உள்ளீட்டைக்கொண்ட சாதாரண அளவிலான ஒரு மாம்பழ வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிலிருந்து 70 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
    - அங்குனகொலபெலெஸ்ஸ டெஞ்ஜரீன் 1 (சிலோன் பேபி) – 80-100 கிராம் அளவு எடையுடைய கடும் செம்மஞ்சல் நிறத்திலான உள்ளீட்டைக்கொண்ட சாதாரண அளவிலான ஒரு டெஞ்ஜரீன் வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிலிருந்து 40-50 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
    - அங்குனகொலபெலெஸ்ஸ போமெலோ 1 (ரூபி விதைகளற்ற) – பெரிய அளவிலான ஒரு போமெலோ (கிச்சிலி) வர்க்கமாகும். 7 வருடங்களில் ஒரு மரத்திலிலிருந்து 100-120 கிலோ கிராம் வரையிலான விளைச்சலைப் பெற முடியும்.
- லங்கா ரெட் மற்றும் மலீ பிங்க் என்ற புதிய மாதுளை வர்க்கங்கள் இரண்டும் புதிய பீச் (கம்பளிப்பேரி) வர்க்கங்கள் இரண்டும் பரிந்துரைக்கப்பட்டன.
- வாழையில் மஞ்சல் சிகடோகா இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த 2 வார கால இடைவெளியில் ஒரு வாழை மரத்திற்கு கல்சியம் நைட்ரேட் 10 கிராம் என்ற அடிப்படையில் மண்ணில் சேர்ப்பதன் மூலம் Cavendish வகை தாவரங்களில் நோய்த் தொற்றுகள் ஆரம்ப கட்டத்திலேயே குறைவதாகவும் 14 நாட்கள் இடைவெளியில் எசோக்ஸ்சிஸ்ட்றோபின் 250 g/L SC இடுவதனால் நோய் வளர்ச்சியை திறன்பட கட்டுப்படுத்த முடிவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- வாழைத் தண்டு துளைப்பான்களைக் கட்டுப்படுத்த காஸ்மோஜெல் என்ற பெரோமோன் தயாரிப்பு கண்டறியப்பட்டது.
- வணிக ரீதியாக விநியோகிப்பதற்கான திசு வளர்ப்பு வாழை செடிகள் உற்பத்தி நடைபெற்று வருவதோடுசுமார் 3,000 வாழைச் செடிகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. 2,000க்கும் மேற்பட்ட செவ்வாழை, அம்பன் மற்றும் புளிப்பு வாழை ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- அன்னாசிப்பழ உச்சிப்பகுதியின் இலை மொட்டுகளை பிரித்து நடவு செய்யும் முறையானது சீரான தன்மையுடன் அதிக எண்ணிக்கையிலான தாவரங்களை உற்பத்தி செய்ய மிகவும் பொருத்தமான முறையாகும். அன்னாசித் தண்டின் முதிர்ச்சியடையாத மற்றும் அரை முதிர்ந்த பகுதிகளிலிருந்து துண்டுகளாகப் பிரித்து நடவு செய்யும் முறையானது ஒரு தொகுதிக்கு பெரிய சீரான தாவரங்களை உற்பத்தி செய்வதற்கான சிறந்த பகிர்வு முறையாகவும் இது அடையாளம் காணப்பட்டது.
- 2.5 கிராம் சேதனப் பொருட்களுடன் (1 சாணம்: 1சேதன உரம்: 1 நன்கு அழுகிய கோழி உரம் 1)1:1 விகிதத்தில் 2.5 கிராம் *Trichoderma asperellum* மற்றும் Trichodermaharzianumஇடுவதுகொய்யா பயிர்ச்செய்கையில்

ஏற்படும்வாடல் நோய்க்கு அதிக மீட்பு விகிதத்துடன் கூடிய ஒரு வெற்றிகரமான சிகிச்சையாக அடையாளம் காணப்பட்டது.

- கொய்யாவில் Anthracnose நோயை ஏற்படுத்தும் *Colletotricum gleosporioides* மற்றும் நுனி/உச்சி அழுகும் நோயை ஏற்படுத்தும் *Phomopsis psidiae* ஐ கட்டுப்படுத்த சோடியம் மெட்டா பைசல்பைட்டின் பயன்பாடு பயனுள்ளதாக கண்டறியப்பட்டது.
- கொய்யா வேர் முடிச்சு நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்த முகாமைத் தொகுப்பு ஒன்று கண்டறியப்பட்டது.
- ஆனைகொய்யா பழத்தின் நுனி/உச்சி அழுகல் நோயை ஏற்படுத்தும் *Botryodiplodea theobromae* இனை கட்டுப்படுத்துவதில் *Trichoderma asperellum* மற்றும் Bacillus subtilis என்பன மெல்லிய பூச்சிடப்பட்ட கலவையை லீட்டருக்கு 2.5 கிராம் என்ற அளவில் பயன்படுத்துவதானது அதிக பலனளிப்பதாக கண்டறியப்பட்டது.
- ஆனைக்கொய்யாவில் Anthracnose நோயை ஏற்படுத்தும் *Colletotricum gleosporioidesஐ* கட்டுப்படுத்துவதில் Bacillus subtilis மெல்லிய பூச்சிடப்பட்ட கலவையை லீற்றருக்கு 2.5 கிராம் என்ற அளவில் பயன்படுத்துவதானது அதிக பலனளிப்பதாக கண்டறியப்பட்டது.
- பூக்கும் காலம் முதல் சிறிய அளவிலான காய்கள் காய்க்கும் வரையில் 21 நாள் இடைவெளியில் Copper hydroxide ஐ இலைகளில் தெளிப்பதன் மூலம் ஆனைக்கொய்யாவில் ஏற்படும் சொறிநோயை அடக்க முடியும் என கண்டறியப்பட்டது.
- மாம்பழம் மற்றும் ஆணை கொய்யா பழங்களில் Anthracnose நோயை உண்டாக்கும் *Colletotrichum* ஐ அடக்கும் திறன் கொண்டதாக சில இலைச்சாறுகள் அடையாளம் காணப்பட்டன. இதன்போது வேம்பு மற்றும் துளசி இலைகளின் சாறு அதிக பூஞ்சை எதிர்ப்புத் திறனைக் காட்டியது.
- ரம்புடன் பழத்தில் ஏற்படும் நுண்துகள் பூஞ்சை காளான் நோயை கட்டுப்படுத்த Azoxystrobin 200 and Ciproconazole 80 SC ஆகியவற்றின் ஒரு லீற்றருக்கு 1 மில்லி லீற்றர் என்ற களவையை ஹெக்டயாருக்கு 600 மில்லி லீற்றர் வீதம் 14 நாட்கள் இடைவெளியில் இலைகளில் தெளிப்பதானது அதிக பலனளிப்பதாக கண்டறியப்பட்டது.
- பப்பாளி வளைய புள்ளி வைரசினை (Papaya Ring Spot Virus) சாரணை, காகிதப்பூ, வேம்பு மற்றும் அந்திமந்தாரை சாறுகளை தெளிப்பதன் மூலம் நடவு செய்து 5ஆவது வாரம் வரை வேம்பு மற்றும் அந்திமந்தாரை சாறுகள் மூலம் நடவு செய்து 7ஆவது வாரம் வரையும் கட்டுப்படுத்தலாம் என்று ஆராய்ச்சியின் மூலம் தெரிய வந்துள்ளது. அத்தோடு சாரணை சாறினால் தாவர வளர்ச்சியில் குறைபாடு ஏற்படுவதும் கண்டறியப்பட்டது.
- கொடிதோடை பழங்களில் (Passion Fruit) கிழக்கு ஆபிரிக்க கொடிதோடை உருக்குலைவு வைரஸை (Passiflora distortion virus) 66% ஒத்த புதிய potyvirus கண்டறியப்பட்டது.
- அறிமுகப்படுத்தப்பட்ட Puu puu, Ma afla என்ற வெளிநாட்டு ஈரப்பலா/சீமைப்பலா மற்றும் உள்நாட்டு முளைமக்கூழ்களின் நுண்ணினப்பெருக்கம் வெற்றிகரமாக முடிவுற்றது.
- ரஹங்கல மற்றும் ராகல பேரிக்காய் ரகங்களின் மூலம் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திசு வளர்ப்பு நுட்பம் உருவாக்கப்பட்டது.

இயற்கை வள முகாமைத்துவம்

- "இலங்கையில் நிலவும் காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகள் பற்றிய விரிவான அறிக்கை ஒன்று (Inventory of Climate Smart Agriculture (CSA) Technologies and Practices in Sri Lanka)" 2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

- நாட்டின் விவசாய உற்பத்தியில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்காக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படும் வானிலை முன்னறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பெருந்தோட்டப் பயிர்களுக்கான விசேட அறிவைக் கொண்ட அதிகாரிகளையும் உள்ளடக்கிய விவசாய வானிலை ஆலோசனைக் குழுவினால் வழங்கப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் அடங்கிய விவசாய வானிலை ஆலோசனைகள் மாதாந்தம் வெளியிடப்பட்டன.

- தேசிய விவசாய வானிலை தரவு கண்காணிப்பு வலையமைப்பு வெற்றிகரமாக பராமரிக்கப்பட்டு வந்ததோடு, பெல்வெஹெர விதை மற்றும் நடுகைப் பொருள் மையத்தில் புதிய விவசாயவானிலை ஆய்வு அலகு நிறுவப்பட்டது.

- இலங்கையில் மாம்பழம், வாழைப்பழம், துரியன், மங்குஸ்தான், மாதுளை மற்றும் ரம்புட்டான் ஆகிய பழங்களுக்களது விவசாய ஆற்றல் பற்றிய வரைபடம் பூர்த்தி செய்யப்பட்டது.
- மொரகஹகந்த புதிய சிறப்பு இயற்கை விவசாய வலயத்திற்கு (3,410 ஹெக்டயார்) மண் பகுப்பாய்வு அடிப்படையிலான நிலப் பொருத்த மதிப்பீடு, வரைபடமாக்கல் மற்றும் வலயத்திற்கு பொருத்தமான பயிர் பரிந்துரை அறிக்கை தயாரிப்பு என்பன பூர்த்தி செய்யப்பட்டன.
- மண் வள பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் சுற்றுச்சூழல் புலனாற்றல் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மண் வள பாதுகாப்புத் திட்டங்கள், மழைநீர் வடிகால் திட்டங்கள், நில மேம்பாட்டு வரைபடங்கள், பொறியியல் வரைபடங்கள் என்பன தயாரிக்கப்பட்டன.

சமூக பொருளாதாரம் மற்றும் திட்டமிடல்

- 2022/23 ஆம் ஆண்டின் பெரும்போக பயிர் உற்பத்திக்கான உற்பத்திச் செலவுகள் மற்றும் இலாப ஈட்டல்கள் குறித்த வெளியீடானது ஒரு இணைய வெளியீடாக வெளியிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக களத் தரவு சேகரிப்புக்கான ஆய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.
- நெல், பிற வயற் பயிர்கள் மற்றும் காய்கறிகளின் மாதாந்த பயிர்ச்செய்கை முன்னேற்றத்தைக் கண்காணிப்பு, மேற்பார்வை செய்யும் வகையில் 2022/23 ஆம் ஆண்டு பெரும்போகம் மற்றும் 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்தின் இறுதிப் பிற்பகுதியை உள்ளடக்கிய வகையில் பயிர் முன்னறிவிப்பு குறித்த பத்து அறிக்கைகள், ஒரு பருவத்திற்கு ஐந்து எனும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.
- ஆம் ஆண்டிற்கான தரவுகளைக் கொண்ட AgStat Volume XX தொகுக்கப்பட்டுள்ளதோடு அதனது இணைய வெளியீடு தயாராகி வருகிறது.
- உணவுப் பயிர் வரவு செலவு அறிக்கையினை தயாரிப்பதற்காக தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், 20 பழப் பயிர்களுக்கான வரவு செலவு அறிக்கை தயாரிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 11 பயிர்களுக்கான 218 பயிர் விளைச்சல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. மாகாண விவசாய திணைக்களங்களுடன் இணைந்து மாவட்ட மட்டத்தில் கள விளக்க மாதிரிகள் நடாத்தப்பட்டன. ஏனைய வயற்பயிர் விளைச்சல் ஆய்வுகள் தொடர்பில் 11 வீடியோ வழிகாட்டிகள் மற்றும் பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டன.
- நெற் பயிர் மஞ்சலாவதற்கான காரணங்களைக் கண்டறியவும் நெல் விளைச்சலில் அது ஏற்படுத்தும் பாதிப்பை வெளிப்படுத்தும் விதமாகவும் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பிடும் வகையிலும் விவசாயிகளின் நேர்காணலுடன் ஒன்றிணைந்த வகையில் பயிர் விளைச்சல் ஆய்வுகள் நாடத்தப்பட்டன.

விரிவாக்கம் மற்றும் பயிற்சி

- நெற்பயிர்ச்செய்கை தொழில்நுட்பத்தை பிரபல்யப்படுத்தும் விதமாக,
    - முறையாக நிலத்தை தயார் செய்ய 150 ஹெக்டயாருக்கு மானியம் வழங்கல்,
    - ஒவ்வொரு பகுதிக்கும் மிகவும் பொருத்தமான நெல் வகைகளை வழங்குதல்,
    - நாற்று நடவின் போது பாராசூட் தட்டுகளைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக மானிய அடிப்படையில் பாராசூட் தட்டுகளை வழங்குதல்,
    - வரப்பு மீது மேற்கொள்ளும் பாசிப்பயறு பயிரச்செய்கையை ஊக்குவிப்பதனூடாக குழையுரம் /பசுந்தாள் உரத்தினை குறித்த இடத்திலேயே தயாரித்தல் மற்றும் மூன்றாவது போக பயிர்ச்செய்கைக்கான விதைகளை உற்பத்தி செய்வதற்கான மானியம் வழங்கப்பட்டது.
- ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க கீழ்க்கண்டவாறு செயல்விளக்க மாதிரிகள் மற்றும் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- புதிய பிரதேசங்களில் பாசிப்பயறு பயிர்ச்செய்கையை விஸ்தரிப்புச் செய்யும் நோக்கத்துடன் 173 ஹெக்டயாருக்குத் தேவையான பாசிப்பயறு நடுகை விதை விவசாயிகள் மத்தியில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.
- தலா 25 ஹெக்டயார் பரப்பளவில் பதினாறு பாசிப்பயறு உற்பத்தி கொத்துக் கிராமங்களை நிறுவுதல்.
- வயல்களில் உயர் அடர்த்தி பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் 1,623 ஹெக்டயார் பரப்பளவில் சோளப்பயிர்ச்செய்கையை விரிவுபடுத்த நடுகை விதை மானியம் வழங்குதல் மற்றும் உயர் அடர்த்தி மாதிரிப் பயிர்ச்செய்கைகளுக்காக வேண்டி 322 ஹெக்டயாருக்குத் தேவையான உள்நாட்டு கலப்பின விதைகளை இலவசமாக வழங்குதல்.
- 2,386ஹெக்டயார் நிலப்பரப்பில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் விதமாக உள்நாட்டு கலப்பின சோள நடுகை விதைகளை இலவசமாக வழங்குதல்.
- உள்ளூர் கலப்பின சோள விதை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் 115 ஹெக்டயாருக்கு தூய பெற்றோர் வரிசை விதைகளை வழங்குதல் மற்றும் முறையாக நிலத்தை தயார் செய்ய 150 ஹெக்டயாருக்கு மானியம் வழங்கல்
- விவசாயிகளிடையே உள்ளூர் கலப்பின மிளகாய் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் விதமாக 342 கிலோ MICHHY1கலப்பின மிளகாய் விதைகளை இலவசமாக வழங்குதல் மற்றும் விவசாயிகளின் 25% பங்களிப்பின் கீழ் 30 சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை வழங்குதல்.
- வீட்டுத்தோட்ட மட்டத்தில் மிளகாய் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க 150,000 பயிரிடும் பைகளை இலவசமாக வழங்குதல்.
- பெரிய வெங்காயச் செய்கையில் அதிக விளைச்சல் தரும் தொழில்நுட்பப் பொதிகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஐம்பத்தைந்து (55) செயல்விளக்கங்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- வெங்காய விதை உற்பத்திக்காக 69,950 கிலோ தாய் குமிழ்களை வசந்தகால நிலைப்படுத்த போக்குவரத்து செலவு வழங்கப்பட்டதுடன் மழை நீர் பாதுகாப்பிற்கான 100 மாதிரி அமைப்புகளுக்காக பொலித்தீன் விரிப்புகளை வழங்குதல்.
- சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் செயல்விளக்க மாதிரிகளாக புதிதாக 475 ஹெக்டயார் பரப்பில் சோயா பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்த 23,746 கிலோ விதைகள் மற்றும் உட்பாய்ச்சல் ஊடகங்கள் இலவசமாக வழங்கப்பட்டதுடன் விதை உற்பத்திக்காக விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் 152 ஹெக்டயாருக்குத் தேவையான 7,620 கிலோ பதிவு செய்யப்பட்ட சோயா விதைகள் வழங்கப்பட்டன.
- இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக விவசாய சங்கங்களுக்கு 30 கௌபி கதிரடித்தல் இயந்திரங்கள் வழங்குதல்.
- சுய விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக 79 கிலோ சிவப்பு/சின்ன வெங்காய உண்மை விதைகள் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.
- சுய விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, 539 ஹெக்டயாரில் செயல்விளக்கத்திற்கான தரமான உளுந்து/உளுத்தம் பருப்பு விதைகளை இலவசமாக வழங்குதல் மற்றும் அதிக விளைச்சல் தரக்கூடிய, வைரஸை எதிர்க்கும் புதிய வகை விதைகளை (MIBG 3, MIBG 4) பிரபல்யப்படுத்துவதற்காக 792 செயல்விளக்கங்களை நடத்துதல்.
- விவசாயிகளின் வயல்களில் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை அதிகரிக்க 420,000 G0 தண்டடிக் கிழங்குகள், 36.4 மெட்ரிக் டன் அடிப்படை விதைகள் மற்றும் 720 பிளாஸ்டிக் கூடைகள் வழங்குதல்.

- யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாயிகளுக்கு உயர் வெப்பநிலையைத் தாங்கும் ரெட் லா சோடா உருளைக்கிழங்கு வகையின் 730 கிலோ விதைகள் இலவசமாக விநியோகம்.

- தொழில்நுட்ப ரீதியான விவசாய பிரச்சினைகளை கள அளவில் தீர்க்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் விவசாய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கூட்டங்கள் நடாத்தப்படுகிறது.
- விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களங்களின் வெற்றிகரமான விரிவாக்கத் திட்டங்களைத் தெரிவு செய்து பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- 11 விவசாயக் கல்லூரிகளில் கல்விசார் வசதிகளை மேம்படுத்த உட்கட்டமைப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.
- 2018/2020 உயர் தேசிய விவசாய டிப்ளோமா பாடநெறி (NVQ 6) மற்றும் 2019/2020 தேசிய விவசாய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி (NVQ 5) பிரிவுகளில் 482 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- SL-GAP மற்றும் GAP B சான்றிதழ்களுக்காக வேண்டி 4,106 விவசாயப் பண்ணைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு 3,175 நுழைவு நிலை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 943 பழங்கள், காய்கறிகள் மற்றும் நெற் பண்ணைகளுக்கு GAP சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- SL-GAP திட்டத்தின் கீழ் 182 பண்ணைகளது சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் இந்த ஆண்டில், நாடளாவிய ரீதியில் 42 GAP மாதிரி கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- 54 மகளிர் விவசாய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- நுவரெலியா, அனுராதபுரம் மற்றும் பதுளை மாவட்டங்களில் பூங்கனியியல் பயிர்களுடன் தொடர்புடைய சிறுதொழில் முனைவோர் வலுவூட்டல் மற்றும் ஊக்குவிப்பு (SHEP) அணுகுமுறையைப் பின்பற்றி சந்தையை இலக்காகக் கொண்ட விவசாயத்தில் ஈடுபடும் 313 விவசாயிகளை உள்ளடக்கி 12 விவசாயக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

விவசாயத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல்

- இந்த ஆண்டில் 157 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மேலும் உணவுப் பாதுகாப்பு குறித்த 34 வீடியோ நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. 33 சிறப்பு வீடியோ நிகழ்ச்சிகள், 29 குறுகிய தொலைக்காட்சி வணிக வீடியோக்கள் தயாரிக்கப்பட்டன. மற்றும் 281 குறுகிய யூடியூப் வீடியோக்கள் பதிவேற்றப்பட்டன.
- 1,495 வானொலி நிகழ்ச்சிகளும் விவசாயம் தொடர்பான 860 குறுஞ்செய்திகளும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கப்பட்டன.
- இணைய வானொலி (www.Krushiradio.lk) மற்றும் க்ருஷிரேடியோ முகநூல் பக்கம் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.
- புத்தகங்கள் மற்றும் பிற வெளியீடுகளின் 30,011 பிரதிகள், 122,400 துண்டுப்பிரசுரங்கள், 6,865 சுவரொட்டிகள், 336,000 விதை சுட்டிகளின் பிரதிகள் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டதுடன் மேற்படி வெளியீடுகளினது விற்பனை மூலம் ரூ. 1,688,514 ஈட்டப்பட்டது.
- பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக ஏனைய திணைக்களங்கள் சார்ந்த விற்பனை மையங்களுக்கு ரூ.2,885,402 மதிப்பிலான விவசாய வெளியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- DOA, ASDA, Krushi Lanka Gateway ஆகிய இணையதளங்கள் இற்றைப்படுத்தப்பட்டதுன் விவசாயத்திற்கான கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்ப செயலிகள் (பயிர் முன்னறிவிப்பு, SLPaddy Fertilizer, Krushi Advisor மற்றும் 1920 அழைப்பு மைய அமைப்பு, பீடை பூச்சி கண்காணிப்பு தரவு சேகரிப்புச் செயலி. க்ருஷி TV செயலி) என்பன நவீனமயமாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன.
- மண் பரிசோதனை அறிக்கைகள் அமைப்பு (கட்டம் I), சொத்து முகாமை, விவசாயக் கல்லூரி முகாமை அமைப்பு (கட்டம் I & II), நிதி தரவுத்தளம், மேலதிக நேரக் கடமை முகாமை அமைப்பு, தாவர பாதுகாப்புச் சேவை அமைப்பு, பூச்சிக்கொல்லிகள் இறக்குமதிக்கான நிகழ்நிலை விண்ணப்பம், பூச்சிக்கொல்லிகளுக்கான தரநிலை கண்காணிப்புக்கான நிகழ்நிலை அமைப்பு, பதிவு வைத்திருக்கும் அமைப்பு, பழவகைகளின் பங்குதாரர்களது

தரவுத்தளம், வருடாந்த உள்ளக சேவை இடமாற்ற விண்ணப்பம் மற்றும் விவசாயக் கல்லூரி முன்னேற்றக் கண்காணிப்பு அமைப்பு (கட்டம் 3 NVQ 5 மற்றும் 6 மாணவர்கள்) போன்ற தரவுத்தளங்கள் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

- சகல Tropical Agriculture சஞ்சிகைகளையும் உள்ளடக்கி Tropical Agriculture என்ற இணையதளம் மேம்படுத்தப்பட்டது.
- கன்னோருவ மற்றும் படஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவிற்கு 109,999 உள்நாட்டவர்களும் 953 வெளிநாட்டவர்களும் வருகை தந்ததன் மூலம் ரூபா 3.9மில்லியன் ஈட்டப்பட்டது.
- 1920 விவசாயிகள் ஆலோசனை சேவை மூலம் 76,557 கேள்விகளுக்கும் அஞ்சல் மூலம் 185 கேள்விகளுக்கும் மின்னஞ்சல் மூலம் 451 கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டது. குறுஞ்செய்திச் சேவைக்காக பதிவு செய்த 157,718 விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை தொடர்பான குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன.
- தற்போது 500க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் 'எசிதிசி க்ருஷிஹவுல' என்ற WhatsApp குழுமம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
- விவசாயத் தகவல்களைப் பெறுவதற்காக ஒரு ஈ- நூலகம் (Krushi e library) தொடங்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி

- அரசாங்க விதை உற்பத்தி பண்ணைகளின் 2022/23 பெரும்போகம் மற்றும் 2023 சிறுபோகத்தில் பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியானது முறையே 73,685 புசல்கள் மற்றும் 50,743 புசல்களாக காணப்பட்டதுடன் பண்ணைகளின் ஆண்டு பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியானது 124,428 புசல்களாக காணப்பட்டது.
- ஒப்பந்த அடிப்படையிலான விதை உற்பத்தி திட்டத்தின் மூலம் 7,209 புசல்கள் பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. இதற்கமைய, 2023 இல் மொத்த பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி 131,637 புசல்களாக காணப்பட்டதுடன் இது மொத்த தேசிய பதிவு செய்யப்பட்ட விதை நெல் தேவைப்பாட்டின் 81% ஆகும்.
- ஒப்பந்த அடிப்படையிலான திட்டத்தின் கீழ் பதிவு, சான்றளிப்பு மற்றும் வணிக ரீதியாக 40,897 புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
- ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களமானது 151,721 புசல்கள் தரம் தொடர்பில் சான்றளிக்கப்பட்ட விதை நெல்லை வெளியிட்டுள்ளது.
- சோள கலப்பின விதைகளின் விநியோகத்தை அதிகரிக்கும் வகையில் கலப்பின சோள பெற்றோர் வரிசை விதைகள் உற்பத்தியானது தொடங்கப்பட்டுள்ளது. 1,251 கிலோ கலப்பின பெற்றோர் வரிசை விதைகள் அரச விதை மற்றும் நடவுப்பொருள் உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது.
- அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் மற்றும் ஒப்பந்த பயிர்ச்செய்கை முறையில் ஏனைய வயற்பயிர்களது 7090.5 கிலோ ஆதார விதைகளும் 54,085 கிலோ பதிவு செய்யப்பட்ட விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டது.
- ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச்செய்கைக்காக 282 மெ.டொ ஏனைய வயற் பயிர் விதைகளும் 2023/24 பெரும்போகத்திற்காக 194 மெ.டொ ஏனைய வயற் பயிர் விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு 2023 ஆம் ஆண்டில், முளைப்புச் சோதனை செய்யப்பட்ட விதைகளும் உள்ளடங்கலாக வருடாந்த ஏனைய வயற் பயிர் விதை விநியோகமானது 476 மெ.டொ ஆக காணப்பட்டது.
- 12 வகையான காய்கறிகளின் 26 ரகங்களது விதைகள் பெருக்கம் செய்யப்பட்டதுடன் இனப்பெருக்க விதைகளைப் பயன்படுத்தி ஆதார/அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதற்கமைய சிறு மற்றும் பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் ஆதார/அடிப்படை விதை உற்பத்தி 3,326.9 கிலோ ஆகவும் ஒப்பந்த விதை உற்பத்தி 26,752.3 கிலோ ஆகவும் காணப்பட்டதுடன் இது இந்த ஆண்டு ஒப்பந்த விதை உற்பத்தி இலக்குகளை விஞ்சிய நிலையாகும்.

- பொலன்னறுவை, குண்டசாலை, அலுத்தரம, ரஹங்கல, அம்பேபுஸ்ஸ, படஅத்த பண்ணைகளில் கலப்பு விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதுடன், விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 5 கலப்பின மரக்கறி வகைகளின் 5 ரகங்களது 113.06 கிலோ விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- துணை விவசாய பணிப்பாளர் அலுவலகங்களாவன 2023 ஆம் ஆண்டு முழுவதும் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் விவசாய கல்விக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து நடாத்தியதன் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதிக விதை விற்பனையை உறுதி செய்யவும் முடியுமாக இருந்தது.
- விவசாயிகளின் சுய விதை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு முன் ஆரம்ப உருளைக்கிழங்கு விதைகளை வழங்க புதிய பாலித்தீன் வீடு வளாகம் நிறுவப்பட்டது. மொத்த ஆரம்ப மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு உற்பத்தி முறையே 345.65 மெ.டொன் மற்றும் 281.59 மெ.டொன் ஆக காணப்பட்டதுடன் G0 மற்றும் G1 விதை உருளைக்கிழங்குகள் முறைய 1,303,910 மெ.டொன் மற்றும் 19.9 மெ.டொன் உற்பத்தி செய்யப்பட்டது.
- ஆம் ஆண்டில், 291.46 மெ.டொன் ஆரம்ப மற்றும் சான்றளிக்கப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளும் 1,496,751 கிரானோலா வகை நுண் தண்டடிக்கிழங்குகளும் வழங்கப்பட்டன.
- விதை உற்பத்தி பண்ணைகள் மூலம் வழங்கப்படும் மொத்த விதை உருளைக்கிழங்கின் அளவு பெருக்கப்பட்டு நாட்டின் விதை உருளைக்கிழங்கு தேவையில் 30%ஐ வழங்க முடியுமாகவிருந்தது.
- ஒட்டுமுறை பயிர் விதைகள் மற்றும் வேரூன்றிய தண்டுத் துண்டுகள் 630,978 அளவு உற்பத்தி செய்யப்பட்டதுன் 451,927 அளவு பயிர்ச்செடிகள் விநியோகிக்கப்பட்டன.
- காளான் விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ், Abaloni, American Oyster, HORDI Curlymushroom மற்றும் Bhutan Oyster ஆகிய நான்கு வகைகளின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் (200 கிராம் கொண்ட) 20,988 காளான் விதைப் பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டு 21,258 பொதிகள் விநியோகிக்கப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட உள்ளீடுகளின் அதிகரித்த விலைப் போக்கு மற்றும் அடிக்கடி ஏற்பட்ட மோசமான வானிலை நிலைமைகளுக்கு முகங்கொடுத்தவாறு மேற்குறிப்பிடப்பட்ட இலக்குகள் சாத்தியப்படுத்தப்பட்டுள்ளதோடு விதை விற்பனை வருமானத்தை 2 பில்லியன் ரூபாக்களை விட அதிகரிக்கச் செய்தியிருப்பதும் பண்ணைகளை இலாபகரமாக வைத்திருப்பதும் சிறப்பான சாதனைகளாகும்.

விதை அத்தாட்சிப்படுத்தல் பயிர்ப் பாதுகாப்பு

விதை மற்றும் நடவுப்பொருட்களை அத்தாட்சிப்படுத்தல்

- தேசிய விதை உற்பத்தித் திட்டத்திற்குத் தேவையான அடிப்படை விதைகளை உற்பத்தி செய்யும் விதமாக 13,873 மெ.டொன் விதை நெல், 1237 மெ.டொன் ஏனைய வயற் பயிர் விதைகள், 70 மெ.டொன் காய்கறி விதை, 816 மெ.டொன் உருளைக்கிழங்கு விதை மற்றும் 2,133,730 சிறிய தண்டடிக் கிழங்குகள் என்பவற்றின் தரநிலையானது களப்பரிசோதனை மற்றும் விதைப்பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டது.
- அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 294 நாற்றங்கால்கள்/நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டு 761,347 ஒட்டுரக பழச்செடிகள் தரச் சான்றளிக்கப்பட்டன.
- ஒட்டுரக அரும்புகளைப் பெறுவதற்குத் தகுந்த வர்க்கப் பண்புகளைக் கொண்ட 392 தாய்ப் பழச் செடிகளின் தரம் சான்றளிக்கப்பட்டது.
- விவசாயத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்ட காய்கறி மற்றும் மிளகாய் கலப்பின விதைகள் 603 கிலோ மற்றும் 74,938 கிலோ சோள கலப்பின விதைகளும் (MI Maze Hy4 மற்றும் 5) சான்றளிக்கப்பட்டன.
- இலங்கையின் 09 மாகாணங்களில் மகாவலி அதிகாரசபை, பகுதியளவு-அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், 150க்கும் மேற்பட்ட உழவர் சங்கங்களைச் சேர்ந்த 13,378 விதை உற்பத்தியாளர்களுக்கு விதை மற்றும் நடவுப் பொருள் சான்றளிப்பு வசதிகள் வழங்கப்பட்டன.
- கன்னோறுவ விவசாய தொழில்நுட்ப பூங்காவில் தனியார் நாற்றங்கால்/நாற்றுமேடை உரிமையாளர்களுக்கு 06 விற்பனை நிலையங்களை வழங்குவதன் மூலம் தரமான நடவுப் பொருட்களுக்கான சந்தையை தாராளப்படுத்தும்

வகையிலும் நாற்றங்கால் உரிமையாளர்களை தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- 2003 ஆம் ஆண்டு 22ஆம் இலக்க விதைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 1,282 விதை கையாளுநர்கள் தரமான விதைகளைக் கையாள தகுதியுள்ளவர்களாகப் பதிவு செய்யப்பட்டதுடன் 1,374 பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.
- 2003 ஆம் ஆண்டு 22ஆம் இலக்க விதைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தொடர்ந்தும் இயங்கி வரும் விதை கையாளுபவர்கள் 6,500 பேர் கண்காணிக்கப்பட்டனர்.
- சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் அனைத்து வகைகளையும் அளவுகளையும் கொண்ட விதைகளின் பொதிகளுக்கு விதைச் சட்டத்தின் பிரகாரம் சுட்டிகளைப் பயன்படுத்தவும் மற்றும் விதைப் பொதிகளை பாதுகாப்பான மும்மடி அலுமினியம் உறையில் இட்டு வழங்கவும் விதை உற்பத்தியாளர்கள் வழிநடாத்தப்பட்டனர். 2023 ஆம் ஆண்டில் 2,724 சுட்டிகள் அங்கீகரிக்கப்பட்டதனூடாக நுகர்வோர் நம்பிக்கையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- விதைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள விதை கையாளுபவர்களுக்குரிய விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை அடையாளம் காணவும் அவற்றை தடம் அறியும் வகையிலும் QR குறியீடொன்றை அறிமுகம் செய்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- விதைகள் மற்றும் நடவுப் பொருட்கள் தொடர்பாக விதைக் கட்டளைச்சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 25 முறைப்பாடுகள் ஆராயப்பட்டு, அவற்றில் 04 முறைப்பாடுகளுக்காக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ரூ.875,000 இழப்பீடு வழங்குமாறு விதை மற்றும் நடவுப் பொருட்கள் சார்ந்த வியாபாரிகளுக்கு அறிவுறுத்தியதன் மூலம் விதை நுகர்வோர் பாதுகாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- நெல், காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற வயற் பயிர்களின் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி குறித்து அரச அதிகாரிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் பழ நாற்றங்கால் உரிமையாளர்களுக்குப் பயிற்சி அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- புதிய வர்க்கங்களை வெளியிடுவதற்கு முன்பதாக குறித்த வர்க்கங்களின் புதுமைத் தன்மையை அடையாளம் காண்பதற்காக வேண்டி முன்னெடுக்கப்படும் தனித்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் நிலைத்தன்மை (DUS) குறித்த 32 பரிசோதனைகள் நெல், காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற வயற் பயிர்களுக்காக நடாத்தப்பட்டன. விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 08 கலப்பின ரகங்களுக்கு கலப்பினப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.
- விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினை வழங்குவதன் மூலம் ரூபா 10 மில்லியனை விட கூடுதலான வருவாய் ஈட்டப்பட்டது.
- சிறந்த விவசாய நடைமுறைகளை பின்பற்றுகின்ற காய்கறி, பழம் மற்றும் நெற் பண்ணைகளின் நிலமைகளை அத்தாட்சிப் படுத்துவதற்காக வேண்டி 926 பண்ணைகள் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அவற்றில் 826 பண்ணைகளில் சிறந்த விவசாய நடைமுறைகள் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டது.

தாவரங்களைப் பாதுகாத்தல்

- இலங்கை முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் (கம்பஹா, கொழும்பு, கட்டுநாயக்கா, கேகாலை, குருநாகல், மட்டக்களப்பு) தெங்குப் பயிர்களில் வெள்ளை ஈக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது.
- மஞ்சள் குமிழ்களைப் பயன்படுத்தி கத்தரி, வெண்டிக்காய் மற்றும் கோவ/முட்டைக்கோஸ் பயிர்களில் Lepidoptera வகை பூச்சிப்பீடை (அந்துப்பூச்சி) கட்டுப்படுத்தப்பட்டது.
- பீடைபூச்சிக் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் பல மாவட்டங்களில் நெற் பயிர்ச்செய்கையின் 6 முக்கிய பூச்சி பீடைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் தேவையான தரவுகளைச் சேகரிக்க புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது. (தற்போது தரவுகள் பெறப்பட்ட வண்ணம் உள்ளது)
- படைப்புழுவினை கட்டுப்படுத்துவதற்காக சோளப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் பிரதானமான மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பீடைப்பூச்சிக் கண்காணிப்புத் திட்டமானது செயற்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.

- பிரதானமாக பழப்பயிர்களை பயிரிடும் மற்றும் cucurbitaceae குடும்பத்தைச் சேர்ந்த காய்கறிப் பயிர்களை பயிரிடும் மாவட்டங்களுக்கு பழ ஈ மற்றும் cucurbitaceae காய்கறிகளை தாக்கும் ஈ தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் மாதிரிகளை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- மேல், வடமத்திய, மத்திய மாகாணங்கள் மற்றும் இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்நிய ஆக்கிரமிப்புத் தாவர இனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்திட்டமானது தயாரிக்கப்பட்டதுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.
- தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முழு தீவையும் உள்ளடக்கிய வகையில் புதிய 173 உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம் கொண்ட அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்
- நிரந்தர பயிர் மருத்துவ சிகிச்சை திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் சுமார் 43 உத்தியோகத்தர்கள் புதிய தாவரவியல் வைத்தியர்களாக பயிற்சி பெற்றனர். CABI அமைப்புடன் இணைந்து பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- Salvinia மற்றும் Common water hyacinth ஆக்கிரமிப்புத் தாவரங்களைக் கட்டுப்படுத்த பொல்பிதிகம – கும்புக்கெடே, பராக்கிரம சமுத்திரம், குளியாப்பிட்டிய, சீகிரியா மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய பிரதேசங்களில் உயிரியல் கட்டுப்பாட்டுப் பூச்சிகள் வெளியிடப்பட்டதுடன் பொலொன்னறுவ, பல்லேபொல, அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் அன்னிய ஆக்கிரமிப்புத் தாவரக் கட்டுப்பாடு தொடர்பில் 445 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

தாவர மரபணு வளங்களைப் பாதுகாத்தல்

- உணவுப் பயிர்கள் மற்றும் தொடர்புடைய இனங்களுக்கே உரித்தான மரபணு பல்வகைமையை ஆய்வு செய்தல், சேகரித்தல், பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகியவற்றின் தொடர்ச்சியான பணிக்காக கள ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து 295 புதிய பயிர்கள் மற்றும் அவற்றின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் மரபணு வங்கியில் மொத்தம் 329 மாதிரிகள் புதிதாகப் பாதுகாக்கப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டு இறுதியில் மரபணு வங்கியில் பாதுகாக்கப்படும் மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை 17,211 ஆக காணப்பட்டது.
- ஆய்வுகூட குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட 400 மாதிரிகள் கொண்ட தொகுப்பு மெதுவான வளர்ச்சி ஊடகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதில் 120 வற்றாளை / சர்க்கரைவள்ளிக் கிழங்கு மாதிரிகள், 25 உருளைக்கிழங்கு மாதிரிகள், 210 உள்ளூர் கொடிக் கிழங்கு மாதிரிகள், 24 ஆழ்வள்ளிக் கிழங்கு மாதிரிகள் மற்றும் 21வாழைப்பழ மாதிரிகள் அடங்கும்.
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் உபயோகத்திற்காக நலனுக்காக தாவர மரபியல் வளங்களின் நிலையான முகாமை மற்றும் பயன்பாட்டிற்கு ஈடுபாட்டுடன் பங்களிக்கும் நோக்கத்துடன் பல்வேறு பயிர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 292 மாதிரிகள் ஆராய்ச்சி விஞ்ஞானிகள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கோரிக்கையின் பேரில் விநியோகிக்கப்பட்டன.

தாவர தடுப்புக்காப்பு

- காங்கேசன்துரை துறைமுக வளாகத்தில் தாவர தடுப்புக்காப்புப் பிரிவு ஒன்றினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு தாவர தடுப்புக்காப்பு நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.
- மின்னணு தாவர உடனலவியல் சான்றிதழ்கள் (e-phyto) மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகள் உள்ளடங்களாக மொத்தம் 36 நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பரீட்சார்த்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- தாவர தடுப்புக்காப்பு சேவையின் கீழ் உள்ள சேவைகளது தன்னியக்கமாக்கல் (Plant Quarantine Information and Management System - PQIMS) அமைப்பானது KOICA திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு மேலும் பகுப்பாய்வு செய்து மேம்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

- தாவர தடுப்புக்காப்பு நடவடிக்கையின் போது உபயோகிக்கப்பட்டு விண்ணப்பங்கள் மற்றும் படிவங்களை இலகுபடுத்தல், ஒத்திசைவுப்படுத்தல் நடவடிக்கையானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச வர்த்தக மையத்தின் நிதியுதவியின் கீழ் நிறைவடைந்துள்ளது. இவை 2024 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படும்.
- KOICA திட்டத்தின் கீழ் தாவரத் தடுப்புக்காப்பு செயல்முறையின் நியமங்களை (SOP) தயாரிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளது.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுக தடுப்புக்காப்புப் பிரிவுகளில் தாவர தனிமைப்படுத்தல் சேவைகள் தொடர்பான கொடுப்பனவுகளை இலத்திரனியல் முறையில் (e-Payment system) ஊடாக மேற்கொள்ளும் முறை ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சவால்கள்

- 2022/ 23 பெரும்போக மற்றும் 2023 சிறுபோக பயிர்ச்செய்கை பருவங்களில் ஒப்பீட்டளவில் உரங்களில் ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக நெற் பயிர்ச்செய்கையில் உரங்களின் பயன்பாடு வெகுவாக குறைந்தமை மற்றும் Nematode நூற்புழு சேதம், காநிலையில் அடிக்கடி ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் போன்ற பலதரப்பட்ட காரணிகளின் தாக்கத்தினால் 2022/23 பெரும்போக பயிர்ச்செய்கையின் போது நாட்டில் நெல் வயல்கள் மஞ்சள் நோய் தாக்கத்திற்கு உட்பட்ட நிலையில் விளைச்சல் குறைவடைந்தமை.
- எரிபொருள் விலையேற்றம் காரணமாக விவசாயிகளுக்கு அறுவடை மற்றும் பயிர் நிலத்தை தயார் செய்யும் நடவடிக்கைகளுக்காக அதிக செலவை சுமக்க நேரிட்டமையால் நெற்பயிர்ச்செய்கையானது இலாபமற்றதாக மாறியமை.
- ஏனைய வயற் பயிர்களை பயிரிடும் திறன் கொண்ட நிலங்களின் குறைந்த உபயோகம், விவசாய இயந்திரமயமாக்கல் போதிய அளவு காணப்படாமை, மண் மற்றும் நீரின் தரம் குன்றுதல் ஆகிய காரணிகளால் விவசாய உற்பத்தி குறைவடைதல்.
- கிராமிய மட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவுப் பரிமாற்றமானது மெதுவாக நடைபெறும் காரணத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் குறைந்த அளவிலான பயன்பாடு.
- கள மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளிடையே காணப்பட வேண்டிய பரஸ்பர தொடர்பு பலவீனமாகக் காணப்படல் மற்றும் புதிய விரிவாக்கக் கருவிகள், அனுகுமுறைகளுக்கு போதிய அளவு முன்னுரிமை வழங்கப்படாமை என்பன விவசாய விரிவாக்கத்தை மோசமாக பாதித்தல்.
- அதிக உற்பத்திச் செலவு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை வலையமைப்புடன் நேரடியாகத் தொடர்புபடாமையால் விவசாயிகளின் உற்பத்திகளுக்குக் கிடைக்கும் விலை மற்றும் இலாபம் குறைவடைதல்.
- கிராமிய அளவில் விவசாய உள்ளீடுகளின் விநியோகம் தொடர்பில் ஒரு பொறிமுறை இல்லாமை மற்றும் கிராமிய விவசாய சமூகத்தின் ஒழுங்கமைப்பு பலவீனமாகக் காணப்படுதல்.
- ஏனைய வயற் பயிர்கள் தொடர்பான போதிய செயலாக்க வசதிகள் மற்றும் விவசாயக் கைத்தொழில்கள் காணப்படாமை.
- உணவு இறக்குமதியில் காணப்படும் சிக்கல் நிறைந்த வர்த்தகக் கொள்கைகள் காரணமாக உள்நாட்டு விவசாய உற்பத்தியாளர்கள் ஊக்கமிழத்தல்.
- பயிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய மரபணு முளைமக்கூழ்களின் பற்றாக்குறை.
- உள்ளீடுகளின் சந்தை விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கம் நாற்று விதைகளில் ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கம் காரணமாக விவசாயப் பண்ணைகளை இலாபகரமாக நடாத்துவது சவாலாக அமைந்துள்ளமை.
- பல்வேறு துறைகளின் கீழ் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதுமான விவசாய சேவை மற்றும் ஏனைய சேவைகளைச் சார்ந்த பயிற்சி பெற்ற ஊழியர்கள் இலங்கையில் காணப்படாமை .குறைந்த ஊதியம் காரணமாக ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பெறுவதில் காணப்படும் தடைகள்.
- விதைப் பண்ணை உப அலகுகளுக்கு பண்ணை முகாமையாளர்கள்/உதவிப் பண்ணை முகாமையளர்கள் இல்லாத காரணத்தால் அவற்றைத் திறம்பட நடாத்துவதில் சிரமம் ஏற்படுதல்.

- வன விலங்குகளின் (காட்டுப்பன்றிகள், மயில்கள், குரங்குகள், முள்ளம்பன்றிகள், காட்டு யானைகள் போன்றவை) தாக்கத்தால் ஆராய்ச்சிப் பகுதிகள் மற்றும் பிற அபிவிருத்திப் பகுதிகளுக்கு சேதம் ஏற்படுதல்.
- சட்டவிரோதமான முறையில் நச்சுப் பீடை மற்றும் பூச்சிக்கொல்லிகள் நாட்டிற்குள் நுழைவதால் தரமான உணவு உற்பத்திக்கு தடைகள் ஏற்படுதல்.
- மாறுபடும் காலநிலைப் போக்கானது விவசாய உற்பத்தித்திறனில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தல்.
- நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உள்ளீடுகளின் (எரிபொருள், மின்சாரம், விவசாய இரசாயனங்கள், உரங்கள் போன்றவை) விலை அதிகரிப்பு காரணமாக விதை உற்பத்திச் செலவு மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகளின் விலை அதிகரிப்பதனால் சான்றளிக்கப்படாத, முறையற்ற விதமாக விற்பனை செய்யப்படும் விதைகளின் அளவு அதிகரித்தல்.
- பொருளாதார நெருக்கடியால் பழச்செடிகளுக்கான கேள்வி குறைவடைந்தமையால் பழச்செடிகளின் உற்பத்தி மற்றும் தாவர சுட்டியிடுதல் குறைவடைந்ததுடன் விதைச் சட்டத்தின் கீழான பதிவு தொடர்பிலானஆர்வம் குறைவடைதல்.
- அதிகாரிகளுக்கு போதிய போக்குவரத்து வசதிகள் காணப்படாமை மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக கள கண்காணிப்பு நடவடிக்கைகள் தடைப்பட்டதுடன் இது உற்பத்தியில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியமை.
- புதிய தொழில்நுட்ப முறைகள் தொடர்பான திறன் மேம்பாட்டிற்குத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் புதிய விவசாய தொழில்நுட்பங்கள் பற்றிய போதிய அறிவு அதிகாரிகளுக்குக் கிடைப்பதில்லை.
- 2021/22 ஆகிய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட முறையற்ற விவசாயக் கொள்கைகள் காரணமாக சட்டவிரோத பூச்சிக்கொல்லிகளின் புழக்கம் அதிகரித்த காரணத்தினால் 1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பூச்சிக்கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு சவால் ஏற்படல்.
- 1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பூச்சிக்கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உதவி பூச்சிக்கொல்லிப் பதிவாளர்களது நியமன நடவடிக்கைகள் தாமதமாகி வருவதாலும் சில மாகாண சபை அதிகாரிகள் மத்திய அரசின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்காத காரணத்தினாலும் குறித்த பூச்சிக்கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுதல்.
- தாவர தடுப்புக்காப்புச் சேவை மற்றும் அதனுடன் இணைந்த பிரிவுகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகள் அல்லது குறித்த துறையில் அறிவுள்ள பயிற்சி பெற்ற அதிகாரிகள் இல்லாததாலும், இணைய வசதிகள் மற்றும் பராமரிப்பிற்கான போதிய நிதி ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினாலும் தடுப்புக்காப்பு நடவடிக்கைகளை திறமையாக மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்படுதல்.
- காய்கறிகள் மற்றும் பழங்கள் ஏற்றுமதிக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட கள நிலங்களின் பற்றாக்குறை.
- சர்வதேச தர நிலமைகளுக்கு ஏற்ப பழங்கள் மற்றும் காய்கறிகளை பொதி செய்யும் நிலையங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படல்.

எதிர்கால இலக்குகள்

- நெல், பிற வயற் பயிர்கள், பழங்கள் மற்றும் காய்கறி பயிர் வகைகள் என்பவற்றில் தன்னிறைவு அடையும் வகையில் மேம்படுத்தப்பட்ட ரகங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் மூலம் நிலையான உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- தீவிர சுற்றுச்சூழல் நிலைமைகளை எதிர்க்கும் (வறட்சி, உப்புசார்ந்த மண், இரும்பு நச்சாக்கத் தன்மை, அதிக வெப்பநிலை என்பவற்றைத் தாங்கும்) நெல் வகைகளை இனப்பெருக்கம் மூலம் உற்பத்தி செய்தல்
- மேம்படுத்தப்பட்ட நெல், பிற வயற் பயிர்கள் மற்றும் காய்கறி பயிர் வகைகளின் தரமான நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதன் மூலம் தேசியத் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக தரமான விதை உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.
- அரச மற்றும் விதை விநியோகப் பிரிவுகளை ஒன்றிணைத்து நெல் மற்றும் ஏனைய வயற்பயிர்களின் சான்றளிக்கப்பட்ட விதைத் தேவைப்பாட்டில் 25%ஐ வழங்குதல், காய்கறிப் பயிர் விதைகளின் தேசிய விதைத்

தேவையில் 50%ஐ வழங்குதல், உருளைக்கிழங்கு விதையின் தேசிய விதைத் தேவையில் 50%ஐ அடிப்படை விதையாகவும் முன்-அடிப்படை விதையாகவும் வழங்குதல் மற்றும் ஆண்டுதோறும் 1.5 மில்லியன் வெற்றிகரமான ஒட்டுச் செடிகளை வழங்குதல்.

- கலப்பின வகைகளின் கலப்பின சதவீதத்தை தீர்மானிப்பதற்காக மூலக்கூறு அறிவியலை (மூலக்கூறு கண்டறிதல்) பயன்படுத்துவதன் மூலம் குறித்த பணியை வினைதிறன் மிக்க முறையில் செய்தல்.
- விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் மூலம் ஈட்டப்படும் வருவாயை திறம்பட வசூலிப்பதற்காக இணையவழியூடாக பணம் செலுத்தும் முறையை (E-Payment System) அறிமுகப்படுத்தல்.
- Zero Document என்ற எண்ணக்கருவின் அடிப்டையில் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினால் வழங்கப்படும் சேவைகளை முழுமையாக தானியங்கும் (Fully automated digitalized) டிஜிடல் மயப்படுத்தப்பட்ட சூழலில் வினைதிறன் மிக்க முறையில் வழங்குதல் மற்றும் அதனூடாக விதை வயல்களைப் பதிவு செய்தல், சான்றிதழ்கள்களை வழங்குதல், விதைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல், பரிந்துரை, ஒப்புதல், விதை ஆய்வக அறிக்கைகள் என்பவற்றை வழங்குதல், பழ நாற்றங்கால்களைப் பதிவு செய்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சூழலில் வழங்குவதற்கான முறைகளை அறிமுகப்படுத்துதல்.
- விதைக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விதை கையாளுபவர்களை சரியாக அடையாளம் காணும் வகையில் விதைப் பரிசோதனை கூட ஆய்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட விதைகளுக்கு QR குறியீடு மற்றும் வர்ணக் குறியீட்டைப் (Color Code) பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மற்றும் பழச் செடிகளின் அளவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள், தொலைபேசி இலக்கங்கள் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் On time Data பெற்றுக்கொள்ள ஒரு வழிமுறையை அறிமுகம் செய்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை உற்பத்தி குறித்த (TOT) பயிற்சிக்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல்.
- பழச்செடிகள் மற்றும் உருளைக்கிழங்குச் செடிகளின் திசு வளர்ப்பகங்களை கண்காணித்து அத்தாட்சிப்படுத்துவதோடு மா, தோடை, பலா அதிஉயர் தர செடிகளுக்கான அளவுகோல்களை அமைப்பதன் மூலம் விதைகள் மற்றும் நடவுப் பொருட்களது உற்பத்தி நடவடிக்கைகளை வினைதிறன் மிக்க முறையில் முன்னெடுத்தல்.
- SL-GAP சான்றளிப்பு செயல்முறைக்காக எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தை குறைக்கும் விதமாக நிகழ்நிலை அமைப்பு மூலம் கணக்காய்வு அறிக்கைகள், சரிபார்ப்புப் பட்டியல்கள் மற்றும் புகைப்படங்களைப் பெறுவதற்கான ஓர் அமைப்பை நிறுவுதல் மற்றும் காளான்களுக்கான SL-GAP சான்றளிப்பு நடவடிக்கையினை ஆரம்பித்தல்.
- நிலையான விவசாய அபிவிருத்தியை இலக்காக் கொண்டு மண் ஊட்டச்சத்து முகாமைக்குப் பொருத்தமான புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல்.
- விவசாய உள்ளீடுகளின் தரம் சார்ந்த பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமும் அதனுடன் தொடர்புடைய ஆய்வகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் குறைப்பதில் பங்களிப்பு செய்தல்.
- ஒருங்கிணைந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாட்டு உத்திகளை உருவாக்குவதன் மூலம் நிலையான பயிர் உற்பத்தியின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் பங்களிப்பு செய்தல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த, பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாட்டு உத்திகளை பிரபல்யப்படுத்துவதற்காக உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் பெருக்கல் மற்றும் விநியோகத்திற்கான தேசிய மையத்தை நிறுவுதல்.
- நாடு முழுவதும் உள்ளடக்கிய வகையில் நெற் பயிரச்செய்கையை பாதிக்கும் பூச்சி பீடைகளுக்கான கையடக்க மென்பொருள் செயலியை இற்றைப்படுத்தல், படைப்புழு தாக்கம் தொடர்பான தரவுகளைப் பெற கையடக்க மென்பொருள் செயலியை பயன்படுத்துதல் மற்றும் பழ ஈ மற்றும் ஈ இனத்தை கண்டறிய மாவட்ட அளவில் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்
- புதிய தாவரவகம் ஒன்றை நிர்மாணித்தல், இலங்கை முழுவதிலும் உள்ள புறமிருந்து வரும் ஆக்கிரமிப்பு தாவர இனங்களின் இருப்பிடங்களைக் குறித்தல் மற்றும் அந்த இனங்களின் மாதிரிகளை தாவரவகத்தில் பாதுகாத்தல்.
- தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்து அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளாக நியமித்தல்

- பயிர் உற்பத்தியை எளிதாக்கும் வகையில் இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களின் சமூக-பொருளாதார மற்றும் கள நிலைமைகளுக்கு ஏற்ற பயனுள்ள விவசாய இயந்திரமயமாக்கல் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்.
- ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணியாளர்களுக்கு இடையே வலுவான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை பரவலாக பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குதல் மற்றும் மதிப்புச் சேர்க்கும் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்.
- தனியார் - அரச கூட்டாண்மை மூலம் மதிப்புச் சங்கிலி வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- உணவு உற்பத்தித்துறையில் தொழில்முனைவோரை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக நடவடிக்கையெடுத்தல்.
- பயிர்ச்செய்கை முறைகளை மேம்படுத்துதல், விளைச்சல் தொடர்பான முன் கணிப்பு, விநியோகச் சங்கிலிகளை சீராக்கும் விதமாக துல்லியமான விவசாயத்தை மேற்கொள்ளல், தரவு பகுப்பாய்வு மற்றும் உணர் கருவி தொழில்நுட்பங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் விவசாய தொழில்நுட்பங்களை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த வழிவகுத்தல்.
- வெப்பநிலை மாறுபாடு, தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் மோசமான வானிலை நிகழ்வுகள் போன்ற காரணிகளைக் கருத்தில்கொண்டு காலநிலை மாற்றங்களைத் தாங்கும் பயிர் வகைகளை பயிரிடுவது தொடர்பில் கவனம் செலுத்துவதினூடாக விவசாய விளைபொருட்களின் விலையில் ஏற்படும் பாரிய ஏற்ற இறக்கங்களைக் குறைத்தல்.
- பூச்சிபீடைக் கொல்லிகளின் தரத்தினை பரீட்சித்தல் மற்றும் அது தொடர்பில் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கை சுங்க வளாகத்தினுள் ஆய்வுப் பிரிவு ஒன்றினை நிறுவுதல், சகலவிதமான பூச்சி பீடைகொல்லிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வக பகுப்பாய்வுத் திறன்களை ஆய்வு செய்தல், பூச்சி பீடைக்கொல்லிகளுக்கான பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல், இறக்குமதிக்கான அனுமதிகளை வழங்குதல், கட்டணங்களை வசூலிப்பதற்காக நிகழ்நிலை இணையவழி முறையை உருவாக்குதல் மற்றும் பூச்சிபீடைக்கொல்லி கள ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக சிறப்புப் பயிற்சி பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் குழுவை நியமித்தல்.
- தாவர மரபணு வள மையத்தில் மரபணு வங்கியின் அதிகபட்ச உச்ச திறனில் மரபணு வளங்களைப் பாதுகாத்தல்.
- பாதுகாக்கப்பட்ட மரபணு முழைமக்கூழ்களை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி செயல்முறைகளில் உச்ச அளவில் பயன்படுத்தல்.
- விமான நிலைய நுழைவு வாயில்களில் உள்ள தாவர தடுப்புக்காப்பு மையங்களின் ஆய்வக வசதிகளை மேலும் மேம்படுத்துவதன் மூலம் விவசாய பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- விவசாயத்துடன் தொடர்புடைய சர்வதேச வர்த்தகத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், மாம்பழ ஏற்றுமதியில் காணப்படும் தாவர தடுப்புக்காப்புக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல், பூச்சி பீடைகளுக்கு நிலையற்ற தன்மை (Impermanence) அறிக்கை பெற விடயங்களை முன்வைத்தல், மூன்று தபால் நிலையங்களில் தாவர தடுப்புக்காப்புப் பிரிவுகளை நிறுவுதல், பூச்சி பீடை கண்காணிப்புச் சோதனைகளை (Pest Surveillance நடாத்துதல் மற்றும் ஏற்றுமதி திறன் கொண்ட பழங்களுக்கான நீராவி வெப்ப சிகிச்சை தரநிலைகள் (Vapor Heat Treatment Standards) மற்றும் ஏற்றுமதிக்கு முந்தைய சிகிச்சை (Pre-shipment treatment) தரங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான திட்டத்தை தயாரித்தல், பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- அறிவைப் பரப்பும் ஒரு உயர் மட்ட அலகாக மண் பாதுகாப்பு அறிவு மையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் நீர் முகாமை மற்றும் மண் பாதுகாப்பு குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் களத்தில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு பங்களித்தல்.
- மாதாந்த பயிர்ச்செய்கைப் பயிர்களை இலக்காகக் கொண்டு மாதத்திற்கு ஒரு முறையும் பிரதான இரு பயிர்ச்செய்கை போகங்களிலும் விவசாய வானிலை ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால முன்னறிவிப்புகளின் அடிப்படையில் விவசாய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் முறையான பயிர்ச்செய்கை நடவடிக்கையின் பால் விவசாயிகளை வழிநடாத்துதல்.

- மண் வள பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மண் வள பாதுகாப்புக் கட்டளைச் சட்ட அமுலாக்கத்தின் கீழ் விவசாய வயல்களில் செயல்விளக்க மாதிரி மட்டத்தில் மண் வளப் பாதுகாப்பை மேற்கொள்ளல்.

- சமீபத்திய வானிலை நிலவரங்களை கருத்தில் கொண்டுவிவசாய காலநிலை வலயங்களை வரைபடமாக்குதல், காலநிலை மாற்றங்கள் தொடர்பில் ஆய்வு செய்து காலநிலை அபாய வலயங்களை வகைப்படுத்தல், தேசிய மண் தகவல் அமைப்பைத் தயாரித்தல் மற்றும் தெற்காசியாவின் விவசாய காலநிலை தழுவல் வரைபடத்தை தயாரித்தல்.

- விவசாய கல்லூரிகளின் வசதிகளை எதிர்பார்க்கப்படும் அளவில் மேம்படுத்துதல் மற்றும் காலத்துக்கு ஏற்ற திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா (HNDAPT) மற்றும் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDAPT) ஆகிய கற்கைநெறிகளின் தரத்தை மேம்படுத்துதல்.

- தொழில்முனைவோரை ஊக்குவித்தல், விவசாய வணிகத்தில் புதுமைகளை அறிமுகப்படுத்துதல், நடுத்தர அளவிலான விவசாய வணிகத்தை உருவாக்குதல் மற்றும் விவசாயத்தை வணிகமயமாக்கும் நடவடிக்கையினை ஊக்குவித்தல்.

- நாட்டின் உணவுப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு ஊடக விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளல், “1920” விவசாய ஆலோசனை அழைப்புச் சேவையினை வலுப்படுத்தல் மற்றும் அதனது வினைதிறனை மேம்படுத்தும் வகையில் சகல ஆராய்ச்சி மையங்களிலும் “1920” அழைப்பு மையத்தின் துணை அலகுகளை நிறுவுதல். சகல விதமான உணவுப் பயிர்களையும் உள்ளடக்கிய "விவசாய ஆலோசகர்" என்ற கையடக்க மென்பொருள் செயலியை பராமரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் முழுநேர விவசாய வானொலி அலைவரிசையினை (FM) நிறுவுதல்.

.....

தாபனத் தலைவர்
கே.என்.எஸ். ரணதுங்க
விவசாயப் பணிப்பாளர் நாயகம்
2024.05.28

K.N.S. Ranatunga
Director General of Agriculture
Department of Agriculture
- Peradeniya.

அத்தியாயம் 03 - 2023 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ –எப்

2023 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

ரூ.

வ.செ.திட்டம் (நடப்பு ஆண்டு)		குறிப்பு	உண்மையான		
			நடப்பு ஆண்டு	கடந்த ஆண்டு	
-	**வருமான வரவுகள்**			-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ - 1
	உள்நாட்டுப் பொருட்கள் ,சேவைகள் மீதான வரி	2	-		
	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-		
775,000,000	வரியல்லா வருமானம் மற்றும் ஏனையவை	4	884,822,691	783,736,614	
775,000,000	**மொத்த வருமான வரவுகள் (அ)**		**884,822,691**	**783,736,614**	
	வருமானமல்லாத வரவுகள்		-	-	
-	திறைசேரி முற்பணம்		6,753,993,000	5,899,885,000	ஏசீஏ - 3
-	வைப்புகள்		572,763,415	568,669,851	ஏசீஏ - 4
-	முற்பணக் கணக்குகள்		1,469,251,913	1,348,571,573	ஏசீஏ -5/5(ஏ)/5(பி
-	வேறு பிரதான பேரேட்டுக் கணக்குகளின் வரவுகள்		-	-	
-	**மொத்த வருமானமல்லாத வரவுகள் (ஆ)**		**8,796,008,329**	**7,817,126,424**	
-	**மொத்த வருமான வரவுகள் மற்றும் வருமானமல்லாத வரவுகள் இ = (அ) + (ஆ)**		**9,680,831,019**	**8,600,863,038**	
	திறைசேரிக்கு அனுப்புதல்கள் (ஈ)		-	-	
	தேறிய வருமான வரவுகள் மற்றும் வருமானமல்லாத வரவுகள் உ = (இ) - (ஈ)		**9,680,831,019**	**8,600,863,038**	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்		-	-	
5,410,314,000	வேதனாதிகள் ,சம்பளங்கள் ,பிற ஊழியர் பயன் தொகைகள்	5	4,738,031,078	4,755,679,461	
739,700,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	569,979,387	343,103,700	ஏசீஏ - 2(II)
169,000,000	உதவுத் தொகை ,மானியம் மற்றும் மாற்றல்கள்	7	131,997,181	39,968,491	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	-	
6,319,014,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		**5,440,007,646**	**5,138,751,652**	

	மூலதனச் செலவினம்				
	மூலதனச் சொத்துக்கள்				
396,000,000	புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	302,540,572	114,090,918	
269,000,000	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்	11	179,624,636	68,415,711	ஏசீஏ - 2(II)
-	மூலதன ஒப்படைப்புக்கள்	12	33,500,000	-	
-	நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	13	-	-	
15,000,000	திறன் விருத்தி	14	5,940,426	5,222,295	
2,700,500,000	ஏனைய மூலதனச் செலவுகள்	15	2,076,915,799	1,079,292,720	
3,380,500,000	**மொத்த மூலதனச் செலவுகள் (எ)**		**2,598,521,433**	**1,267,021,644**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		496,664,804	564,801,191	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவுகள்		1,494,483,201	1,294,318,401	ஏசீஏ -5/5(அ)
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குக் கொடுப்பனவுகள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவுகள் (ஏ)		1,991,148,005	1,859,119,592	
	மொத்தச் செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		10,029,677,084	8,264,892,888	
	2022 டிசம்பர் ஆம் திகதியன்று 31 முற்பண மீதி ஏ = (இ-எ)		**(348,846,065)**	**335,970,150**	
	முற்பண இணக்கக் கூற்றிற்கு அமைய மீதி		**(348,846,065)**	**335,970,150**	ஏசீஏ -7
	டிசம்பர் ஆம் திகதியன்று 31 முற்பண மீதி		**(348,846,065)**	**335,970,150**	ஏசீஏ -3

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

ஏசீஏ -பி


2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

நிதி நிலைமை தொடர்பான கூற்று

	குறிப்பு -	உண்மையான தற்போதைய மீதி ரூ.	உண்மையான கடந்த ஆண்டு ரூ.
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து ,பொறித் தொகுதி உபகரணம்	ஏசீஏ - 6	29,340,698,362	27,595,423,028
நிதி சொத்துக்கள்			
முற்பண கணக்குகள்	ஏசீஏ -5/5(அ)	525,555,870	508,881,530
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ - 3	-	-
மொத்த சொத்துக்கள்		**29,866,254,232**	**28,104,304,558**
தேறிய சொத்து /உரிமை முதல்			
தேறிய சொத்துக்கள்		(120,442,340)	(61,018,069)
சொத்துக்கள் , பொறித்தொகுதி மற்றும்		29,340,698,362	27,595,423,028

உபகரணங்களின் இருப்பு வாடகைகள் மற்றும் வேலை முற்பண இருப்பு	ஏசீஏ -5(ஆ)	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ -4	645,998,210	569,899,599
முற்பண மீதி	ஏசீஏ - 3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**28,104,304,558**	**28,104,304,558**

மேலே உள்ள ஏ.சி.ஏ. வடிவத்தில் இலக்கம் 4 முதல் 56 வரையான மாதிரிப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கணக்குகளுக்கு உரிய தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் பக்க இலக்கம் 57 இலிருந்து 127 வரையில் உள்ளடக்கப்பட்டு உள்ள கணக்குக் குறிப்புக்களின் விபரங்களும் இந்த இறுதி நிதிக் கூற்றுக்களிலேயே உள்ளடக்கப்பட்டு உள்ள இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள படி மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டு உள்ள புள்ளி விவரங்கள், தொடர்புடைய கணக்கீட்டுக் குறிப்புகள் மற்றும் பிற கணக்கீட்டுத் தகவல்கள் என்பன திறைசேரிக் கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது எனவும் இந்த புள்ளி விவரங்களுடன் உடன்படுகின்றன எனவும் நாங்கள் இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றோம்.



3.3 நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூற்று

ஏசீஏ -சீ

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

		உண்மையான	
		நடப்பு வருடம்	கடந்த ஆண்டு
		ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்			
மொத்த வரி வரவுகள்		-	-
கட்டணங்கள்தண்டப் பணம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள்	,மிகையூதியங்கள்,	884,822,691.00	783,736,614
இலாபங்கள்		-	-
வருமானம் அல்லாத வரவுகள்		-	-
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானங்கள்		702,670,035	581,853,505

முற்பண வரவுகள்	6,753,993,000	5,899,885,000
முற்பண அறவீடுகள்	1,465,065,715	1,353,819,707
வைப்புக்களின் கொடுப்பனவுகள்	572,763,415	568,669,851
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள் (அ)	**10,379,314,856**	**9,187,964,676**
கழி – பணம் செலவிடுதல் :		
ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள்	7,705,087,972	6,290,490,644
மானியங்கள் மற்றும் மாற்றல் செலவுகள்	131,997,181	39,968,491
ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக ஏற்கப்பட்ட செலவுகள்	384,650,446	931,318,012
திறைசேரிக்கு ஈடுசெய்யப்பட்ட முற்பணம்	-	-
முற்பணக் கொடுப்பனவுகள்	1,482,285,817	1,294,005,289
வைப்புக் கொடுப்பனவுகள்	496,664,804	564,801,191
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட நிதிப் பாய்ச்சல்ஆ))	**10,200,686,220**	**9,120,583,626**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள் (இ)= (அ)-(ஆ)	**178,628,636**	**67,381,050**
முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரிமைகள் நீங்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதீகச் சொத்துக்களை விற்பனை செய்தல்	-	-
உப கடன்களை அறவிட்டுக்கொள்ளல்		
முற்பணங்களை அறவிட்டுக்கொள்ளல்		
முதலீட்டுச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப்பாய்ச்சல்கள் (ஈ)	-	-
கழி – பணம் செலவிடுதல் :		
பௌதீகச் சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கையகப்படுத்திக்கொள்ளல்	178,628,636	67,381,050
முதலீட்டு நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்த நிதிப் பாய்ச்சல் (உ)	**178,628,636**	**67,381,050**
முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப்பாய்ச்சல் (உ) – (ஈ) = (ஊ)	**(178,628,636)**	**(67,381,050)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல் (உ) – (ஈ)) = (ஊ)	-	-
	0	**0**

நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
உள்நாட்டுக் கடன் வாங்கல்கள்	-	-
வெளிநாட்டுக் கடன் வாங்கல்கள்	-	-
கொடைகள் கிடைக்கப்பெறல்	-	-
வைப்புக்களின் வரவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய மொத்த நிதிப் பாய்ச்சல் (ஏ)	-	-
கழி – நிதிச் செலவினங்கள் :		
உள்நாட்டு கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வெளிநாட்டு கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வைப்புக் கொடுப்பனவுகள்	-	-
நிதி செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல்) ஐ (	-	-
நிதி செயற்பாட்டிலிருந்து தோன்றிய மொத்தக் காசுப் பாய்ச்சல்) ஒ) = (ஏ) – (ஐ (	-	-
பணத்தின் தேறிய மாற்றங்கள்)ஒள) = (எ – ( )ஒ (	-	
சனவரி ஆம் திகதியன்று ஆரம்பப் பண 01 மீதி		
டிசம்பர் 31 ஆம் திகதியன்று இறுதிப் பண மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள்

இல்லை.

3.5 வருமான சேகரிப்புச் செயலாற்றுகை

ரூ. ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
20.03.02.18	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள்	610,000.00	775,000.00	884,822.69	114
20.03.99.00	ஏனைய வரவுகள்	100,000.00	100,000.00	437,869.42	438
20.02.01.01	வீட்டு வாடகைகள்	36,000.00	36,000.00	36,302.63	101
20.06.02.01	மூலதனச் சொத்துக்களை விற்பனை செய்தல் (வாகனங்கள்)	10,000.00	10,000.00	12,090.37	121

20.06.02.02	வாகனங்கள் தவிர்ந்த ஏனைய மூலதன விற்பனைகள்	2,000.00	2,200.00	614.38	279
20.02.02.99	வட்டி / ஏனையவை	27,000.00	27,000.00	27,481.48	102

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ரூ. ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவின் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	6,319,014.00	6,319,014.00	5,440,007.65	86.09
மூலதன	3,380,500.00	3,390,500.00	2,598,521.43	76.64

3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதி ஒருவராக இத்திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

ரூ. , 000

தொ .இ	நிதி ஏற்பாடு வழங்கப்பெற்ற அமைச்சு / திணைக்களம்	நிதி ஏற்பாட்டின் நோக்கம்	நிதி ஏற்பாடு		உண்மையான செலவு	வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளில் % என பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள்
			ஆரம்ப ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
1.	118-02-03-020-2509 FR-S4	ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான விவசாயத்திற்கான உயிரியல் உர தயாரிப்புகளை மேம்படுத்துதல்	4,072.18	4,072.18	1,616.21	39.68
2.	118-02-03-020-2509-SP- S3	பாதுகாப்பான விவசாய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரமான விதை உற்பத்தியை அதிகரித்தல்	50,000.00	50,000.00	49,655.24	99.31
3.	118-02-03-020-2509-EX -S2	ஹெல பொஜுன் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்தல்	32,000.00	32,000.00	29,341.65	91.69
4.	118-02-03-020-2509-FC-S1	பசுமை விவசாயத்தை முறைப்படுத்துவது குறித்து அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல்	51.90	51.90	51.90	100.00
5.	118-02-03-020-2509-FC-S1	2023 சிறு போகத்திற்கான சோள பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்	3,000,.00	3,000.00	1,858.58	32.65

6.	118-02-03-020-2509-EN-S4	பசுமை விவசாயத்தை முறைப்படுத்துவது குறித்து அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல்	20,337.82	20,337.82	13,160.94	64.71
7.	118-02-03-020-2509-SC-S5	விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் தர உத்தரவாதம்	12, 000.00	12, 000.00	11,287.86	94
8.	118-02-03-020-2509-SC-S6	பன்முகத்தன்மை பகுப்பாய்வு மற்றும் தாவர மரபணு வளங்களின் ஆய்வுகூட சோதனைக்குழாய் பாதுகாப்பு	2, 000.00	2, 000.00	1,766.05	88
9.	118-02-03-020-2509-SC-S7	களச் சான்றளிப்பின் மூலம் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்	300. 00	300.00	50.91	16.97
10.	118-02-03-020-2509-HO-S8	பல்வேறு அரிசி வகைகளில் காணப்படும் ஈயம் மற்றும் ஈய எச்சங்களை கண்டறிந்து அரிசியின் பாதுகாப்பை உறுதி செய்தல்	1,751.00	1,751.00	1,623.50	92.71
11.	118-02-03-020-2509-HO-S9	கொழும்பு, மாத்தளை மற்றும் புத்தளம் ஆகிய 3 தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் விவசாய உற்பத்திகளின் தாவர மூலம்/தோற்றத்துடன் தொடர்பான உணவு பாதுகாப்பை உறுதி செய்தல்.	5,440.00	5,440.00	5,426.94	99.75
12.	118-02-03-020-2509-HO -S10	மங்களீசு உள்ளடக்கத்தை தீர்மானிப்பதன் மூலம் இலை காய்கறிகளில் மான்கோசெப் எச்சங்களை கண்டறிதல்	5, 000.00	5, 000.00	4,940.21	98.80
13.	118-02-03-020-2509-HO-S11	உள்ளீட்டுகளின் பயன்பாட்டுத் திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றிற்காக உர முகாமையை ஊக்குவிப்பதற்காக மத்திய மற்றும் பிராந்திய ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல்	19,928.00	19,928.00	16,932.29	84.96
14.	118-02-03-020-2509-SP-S13	புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை அறிமுகம் செய்தல் மற்றும் தரமான விதைகள் மற்றும் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்	97,500.00	97,500.00	95,710.34	98
15.	118-02-03-020-2509-SP-S14	தரமான விதை மற்றும் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நுண்ணீர் பாசன வசதிகளை மேம்படுத்துதல்	51,500. 00	51,500.00	41,335.75	80.26

16.	118-02-03-020-2509-SP -S15	சுப முகூர்த்தத்திற்கு ஒரு செடி என்ற தேசிய மர நடுகை திட்டம்	500.00	500.00	500.00	100
17.	118-02-03-020-2509- EX- S16	வருடாந்த பயிர் உற்பத்தி திட்டம் 2023/24	473.40	473.40	473.09	99.93
18.	118-02-03-020-2509- FC-S17	நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிய கண்டுபிடிப்புகளை அபிவிருத்தி செய்தல்	701.21	701.21	316.04	45.07
19.	118-02-03-020-2509-IT -S17	நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிய கண்டுபிடிப்புகளை அபிவிருத்தி செய்தல்	851.13	851.13	806.52	94.75
20.	118-02-03-020-2509-FR-S12	குண்டசாலை தேசிய பழ வர்க்கங்கள் பாதுகாப்பு மையத்தில் நிலைபேறான நீர் வழங்கல் அமைப்புகளை நிறுவுதல்	4,300.00	4,300.00	4,295.41	99.89
21.	118-02-03-020-2202-EX-S1	2023 சிறு போகத்திற்கான சோள பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்	97, 000.00	97, 000.00	96,062.09	99.03
22.	118-02-03-042-2509(13)	ஈரப்பலா பயிர் செய்கையை ஊக்குவித்து சந்தைப்படுத்துவதற்கான முன்னோடி திட்டம்	187.50	187.50	172.71	92.11
23.	118-02-03-020-2509-RR-S17	நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிய கண்டுபிடிப்புகளை அபிவிருத்தி செய்தல்	36.00	36.00		
24.	118-02-03-020-2509-EN-S17	நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிய கண்டுபிடிப்புகளை அபிவிருத்தி செய்தல்	5.86	5.86		
25.	118-02-03-020-2509-FMRC-SP9	விவசாய இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படை பாடத்திட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான பொறுப்புக்களுக்கு நிவாரணமளித்தல்	6.65	6.65		
26.	118-02-03-020-2509-EN-S11	உள்ளீட்டுகளின் பயன்பாட்டுத் திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றிற்காக உர முகாமையை ஊக்குவிப்பதற்காக மத்திய மற்றும் பிராந்திய ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல்	72.00	72.00		

3.8 நிதி சாராத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை ரூ. ,000

சொத்துக்கள் குறியீடு	குறியீடுகளின் விபரங்கள்	31.12.2023 ஆம் திகதியன்று பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2023 ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்படவுள்ள	சதவீதமாக % அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்		7,449,189.46		
9152	இயந்திர உபகரணங்கள்		2,892,431.36		
9153	காணிகள்		18,859,325.91		
9154	தொட்டு உணர முடியாத சொத்துக்கள்		-		
9155	உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள்		-		
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை		139,751.63		
9180	வரி வழங்கப்பட்ட சொத்துக்கள்		-		

3.9 கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை: இணைப்பு II

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயலாற்றுகைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு)

4.1.1 நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% -100%	75% - 89%	50% - 74%
1. ஸ்தாபிக்கப்பட்ட இருப்பு அடர்த்தி எண்ணிக்கை, விளைச்சல் பரீட்சார்த்த சோதனைகளின் எண்ணிக்கை மற்றும் ஆரம்ப விளைச்சல் பரீட்சார்த்த சோதனைகளின் எண்ணிக்கை	√		
2. உற்பத்தி செய்யப்பட்டுள்ள சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் இனப்பெருக்க விதை நெல்லின் அளவு	√		
3. உயிரியல் மற்றும் உயிரியல் அல்லாத அழுத்தங்களுக்கு ஏற்றாளும் திறன் கொண்ட நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதற்கான உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
4. நெல் விளைச்சல் மற்றும் அதன் தரத்தினை விருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பயிராக்கவியல் பரிசோதனைகள் மற்றும் தொழிநுட்பரீதியான தொகுப்புகளின் எண்ணிக்கை	√		
5. நெற்பயிர்ச்செய்கையில் மண், நீர் முகாமைத்துவம் தொடர்பாக நடாத்தப்பட்ட நோயியல் விஞ்ஞான பரீட்சார்த்த பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
6. நெற்பயிரை பீடைகளின் தாக்கத்திலிருந்து தொடர்ந்தும் பாதுகாப்பதற்காக நடாத்தப்பட்ட பூச்சியியல் பரீட்சார்த்த பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
7. நெற்பயிரைப் பாதிக்கும் பல்வேறு நோய்களுக்கான எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சார்த்த பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
8. நெற்பயிர்ச் செய்கையில் களைக் கட்டுப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
9. நெற்தானியத்தின் தரத்தை விருத்தி செய்வதற்காக நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
10. விதை நெல் உற்பத்திக்காக பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம்	√		
11. வெளிக்கள அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை	√		

4.1.2 களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% -100%	75% - 89%	50% - 74%
1. தோற்றுவிக்கப்பட்ட ஏனைய வயற் பயிர் வர்க்கங்களின் எண்ணிக்கை	√		
2. உலர் வலயத்திற்குப் பொருத்தமானது என அடையாளம் காணப்பட்ட மற்றும் தோற்றுவிக்கப்பட்ட மரக்கறி மற்றும் பழப்பயிர்களின் / வர்க்கங்களின் எண்ணிக்கை	√		
3.பயிர் மேம்படுத்தலின் போது வினைதிறன் மிக்க விதத்தில் பயன்படுத்தப்பட்ட உயிரியல் தொழிநுட்ப சாதனங்களின் எண்ணிக்கை	√		
4. ஏனைய வயற் பயிர்களில் பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட தொழிநுட்ப முறைகளின் எண்ணிக்கை	√		
5. உலர் வலயத்தில் பயிரின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட பயிராக்கவியல் தொழிநுட்ப முறைகளின் எண்ணிக்கை	√		
6. உலர் வலயத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட மண் முகாமைத்துவ தொழிநுட்ப முறைகளின் எண்ணிக்கை	√		
7. உலர் வலயத்தில் நீரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட தொழிநுட்ப முறைகளின் எண்ணிக்கை	√		
8. ஏனைய வயற் பயிர்களின் விளைதிறனில் தாக்கம் செலுத்தும் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை	√		
9. இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் வெளிக்கள நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் தோற்றுவிக்கப்பட்ட பயனுறுதியுடைய விவசாய இயந்திரமயமாக்கல் தொழிநுட்பங்களின் எண்ணிக்கை	√		
10. உலர் வலயத்திற்குரிய மரக்கறி/ பழங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய வயற் பயிர்களின் விதை/ நடுகைப் பொருட்களின் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகள்	√		
11.பங்குதார்களிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட விவசாயத் தொழில்நுட்ப வழிமுறைகளின் எண்ணிக்கை	√		

4.1.3 தோட்டப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% -100%	75% - 89%	50% - 74%
1. தோற்றுவிக்கப்பட்ட உயர் விளைச்சலைத் தரும் மரக்கறி, கிழங்குப் பயிர் வர்க்கங்களின் எண்ணிக்கை	√		
2. பயிர் வர்க்கங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக இனங் காணப்பட்ட சிறந்த பயிராக்கவியல் பயன்பாடுகளின் எண்ணிக்கை	√		
3. மரக்கறிப் பயிர்ச் செய்கைக் கட்டமைப்புக்களுக்கான சூழலுக்கு சாதகமான பீடைகள் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டு முகாமைத்துவத் தொழிநுட்ப வழிமுறைகளின் எண்ணிக்கை	√		
4. மேற்கொள்ளப்பட்ட மண் மற்றும் உரங்களின் தரப் பரிசோதனைகளின் எண்ணிக்கை	√		
5. உற்பத்தி செய்யப்பட்ட ஆரம்ப கரு விதைப் பொருட்களின் தொகை	√		
6. பயனுறுதிமிக்க வகையில் விரிவாக்கம் செய்யப்பட்ட தோற்றுவிக்கப்பட்ட தொழிநுட்ப வழிமுறைகளின் எண்ணிக்கை		√	
7. நிலவும் பெறுமதி சேர்க்கப்பட்ட மரக்கறி உற்பத்திகளின் எண்ணிக்கை		√	
8. விருத்தி செய்யப்பட்ட அறுவடைக்கு முன்/ பின்னான தொழிநுட்ப முகாமைத்துவப் பயன்பாடுகளின் எண்ணிக்கை		√	
9. சேதன மரக்கறிப் பயிர் உற்பத்திக்காக உருவாக்கப்பட்ட முகாமைத்துவ தொகுதிகளின் எண்ணிக்கை	√		
10. உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உணவு மாசுகள் தொடர்பான பகுப்பாய்வு/ பகுப்பாய்வு செய்யப்பட்ட உணவுப் பயிர்கள் மற்றும் நீர் மாதிரிகளின் எண்ணிக்கை	√		
11. மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை	√		
12. பூச்சி இனங்கள் தொடர்பில் LC50 (உயிர்போக்கும் அளவை) கணக்கிடுவதற்காக நச்சுயியல் ஆய்வுகள் நடாத்தப்பட்ட பூச்சிக்கொல்லிகளின் எண்ணிக்கை.	√		
13. வெளியிடப்பட்ட உயிரியல் கட்டுப்பாட்டு ஊடகங்களின் எண்ணிக்கை	√		
14. வெளிக்கள அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை	√		
15. நிறுவனத்தினால் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	√		

4.1.4 பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% -100%	75% - 89%	50% - 74%
1. வெளியிடப்பட்ட பழப்பயிர் வகைகளின் எண்ணிக்கை		√	
2. பழப்பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்க உருவாக்கப்பட்ட வெற்றிகரமான விவசாய நுட்பங்களின் எண்ணிக்கை	√		
3. பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	√		
4. மண் ஊட்டச்சத்து முகாமைக்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	√		
5. உருவாக்கப்பட்ட நடுகைப் பொருள் உற்பத்தித் தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	√		
6. உருவாக்கப்பட்ட அறுவடைக்குப் பிந்தைய மற்றும் மதிப்புச் சேர்த்தல் தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	√		
7. உற்பத்தி செய்யப்பட்ட இனப்பெருக்க விதை மற்றும் நடுகைப் பொருட்களின் அளவு		√	
53. "FAO-China South - South cooperation திட்டங்களின் கீழ் IPPC மற்றும் அதன் தர நிலைகளை செயல்படுத்துவதுடன் தொடர்புடைய வளர்ந்து வரும் தரப்பினர்களின் திறனை வலுப்படுத்துதல்" மற்றும் மூலோபாய திட்டமிடல் குழு (SPG) என்பன தொடர்பான IPPC உளகலாவிய திட்டத்தின் சுருக்க பயிற்சிப் பட்டறை	02	10.10.2023 முதல் 13.10.2023 வரை			வெளிநாட்டு	தாவர பாதுகாப்பு தொடர்பான அறிவுப் பகிர்வு
54. தாவர தடுப்புக்காப்புச் சேவை திட்ட நவீனமயமாக்கலின் கீழ் GPA மற்றும் மதிப்புச் சங்கிலி பற்றிய அழைப்புப் பயிற்சி	11	08.10.2023 முதல் 21.10.2023 வரை			வெளிநாட்டு	GPA மற்றும் மதிப்புச் சங்கிலி பற்றிய அறிவு
55. இரசாயன ஆய்வுக் குழுவின் 19 ஆவது கூட்டம் (CRC-19)	01	03.10.2023 முதல் 06.10.2023 வரை			வெளிநாட்டு	விவசாய இரசாயனங்கள் குறித்த அறிவுப் பகிர்வு
56. தாவர தடுப்புக்காப்புச் சேவை திட்ட நவீனமயமாக்கலின் கீழ் தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்புகள் பற்றிய அழைப்புப் பயிற்சி (நிர்வாக நிலை)	05	16.10.2023 முதல் 23.10.2023 வரை			வெளிநாட்டு	தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்புகள் பற்றிய அறிவு
57. IAEA இடைக்கால திட்ட மதிப்பாய்வு கூட்டம் (விரைவு இனப்பெருக்கம் மூலம் மரபணுத் திரிபு செய்வதனூடாக பயிர் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துதல்)	01	16.10.2023 முதல்20.10.2023 வரை			வெளிநாட்டு	மரபணுத் திரிபு செய்வதனூடாக பயிர் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துதல் பற்றிய அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
58. தாவர தடுப்புக்காப்புச் சேவை திட்ட நவீனமயமாக்கலின் கீழ் தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்புகள் பற்றிய அழைப்புப் பயிற்சி (வேலை நிலை)	05	25.10.2023 முதல்01.11.2023 வரை			வெளிநாட்டு	தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்புகள் பற்றிய அறிவு
59. FAO China South - South cooperation நிகழ்ச்சித்திட்ட கட்டமைப்பின் கீழான ஒப்பந்ததாரர்களுக்கான தாவரநல நடவடிக்கைகள் குறித்த மேம்பட்ட தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு	01	30.10.2023 முதல்10.11.2023 வரை			வெளிநாட்டு	தாவரநல நடவடிக்கைகள் குறித்த அறிவு
60. JICA அறிவு இணை உருவாக்கத் திட்டம் :SDG குளோபல் லீடர் திட்டம் 2023 "தாவர இனப்பெருக்கத் துறையில் முனைவர் பட்டம்"	01	01.10.2023 முதல்30.09.2026 வரை 01.10.2026 முதல் 31.03.2027		22,187.21	வெளிநாட்டு	தாவர இனப்பெருக்கம் தொடர்பான அறிவுப் பகிர்வு
61. விவசாய மாசுபாடுகளின் மூலங்கள் மற்றும் நகர்வு என்பவற்றை அடையாளம் காண்பதற்காக சம இயல்புடைய கைவிரல் அடையாளங்களை உபயோகித்தல் தொடர்பான தெற்கு ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு கூட்டம்	01	09.10.2023 முதல் 12.10.2023 வரை			வெளிநாட்டு	விவசாய மாசுபாடுகளின் மூலங்கள் மற்றும் நகர்வு பற்றிய அறிவு
62. வளர்முக நாடுகளுக்கான கால்நடை ஊட்ட சூத்திர விரிவாக்கம் குறித்த கருத்தரங்கு	01	18.10.2023 முதல் 31.10.2023 வரை			வெளிநாட்டு	கால்நடை ஊட்ட சூத்திரம் குறித்த அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
63. ஆசிய அரிசி ஆராய்ச்சிக்கான கூட்டாண்மை கவுன்சிலின் 27வது வருடாந்த கூட்டம் (CORRA)	01	01.11.2023 முதல் 02.11.2023 வரை			வெளிநாட்டு	அரிசி ஆராய்ச்சி அறிவுப் பகிர்வு
64. உணவு மற்றும் விவசாயத்திற்கான தாவர மரபணு வளங்கள் குறித்த சர்வதேச ஒப்பந்த நிர்வாகக் குழுவின் 10வது அமர்வு	01	18.11.2023 முதல் 24.11.2023 வரை			வெளிநாட்டு	உணவு மற்றும் விவசாயத்திற்கான தாவர மரபணு வளங்கள் குறித்த அறிவுப் பகிர்வு
65. CASM அமைப்பினது நிர்வாகக் குழுவின் 19வது அமர்வு: ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் பேண்தகு விவசாய இயந்திரமயமாக்கல் குறித்த 10வது பிராந்திய மன்றம்	01	28.11.2023 முதல் 30.11.2023 வரை			வெளிநாட்டு	விவசாய இயந்திரமயமாக்கல் குறித்த அறிவுப் பகிர்வு
66. JICA அறிவு இணை உருவாக்கத் திட்டம்: சமூகம் சார்ந்த விவசாய வணிகத்திற்கான உணவு மதிப்புச் சங்கிலியை மேம்படுத்தல் குறித்த பயிற்சி வகுப்பு	01	12.11.2023 முதல் 09.12.2023 வரை			வெளிநாட்டு	உணவு மதிப்புச் சங்கிலி பற்றிய அறிவு
67. "மதிப்புச் சங்கிலி வளர்ச்சியை இலக்காகக் கொண்ட விவசாய வணிக நிர்வாகத்தில் காணப்படும் சமகால மற்றும் மூலோபாய சிக்கல்கள்" குறித்த SAARC பிராந்திய பயிற்சி	01	27.11.2023 முதல் 29.11.2023 வரை			வெளிநாட்டு	மதிப்புச் சங்கிலி வளர்ச்சியை இலக்காகக் கொண்ட விவசாய வணிக நிர்வாகம் குறித்த அறிவு
68. சீனா - தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் விவசாயம் சார்ந்த முக்கிய பூச்சி வகைகளுக்கான பசுமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்கம்	01	25.11.2023 முதல் 30.11.223 வரை			வெளிநாட்டு	விவசாயம் சார்ந்த முக்கிய பூச்சி வகைகளுக்கான பசுமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பம் குறித்த அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
69. பாதுகாப்பான உணவுக்கான சிறந்த பயிற்சி - "ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விலங்கு அல்லாத ஊட்டச்சத்து மீதான கட்டுப்பாடுகள் குறித்த BTSF பட்டறை"	04	20.11.2023 முதல் 24.11.2023 வரை			வெளிநாட்டு	ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து மீதான கட்டுப்பாடுகள் குறித்த அறிவு
70. "பூச்சி பீடைகொல்லி எச்ச அபாய மதிப்பீடு மற்றும் ஆசியாவில் அதிகபட்ச எச்ச வரம்புகளை நிறுவுதல்" பற்றிய FAO பிராந்திய பயிற்சிப் பட்டறை	01	20.11.2023 முதல் 24.11.2023 வரை			வெளிநாட்டு	பூச்சி பீடைகொல்லி எச்ச அபாய மதிப்பீடு மற்றும் அதிகபட்ச எச்ச வரம்புகளை நிறுவுதல் குறித்த அறிவுப் பகிர்வு
71. ITEC பயிற்சி வகுப்புகள் "உரத் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் மட்டப் படிப்பு"	02	27.11.2023 முதல் 08.12.2023 வரை			வெளிநாட்டு	உரத் தொழில்நுட்பம் பற்றிய அறிவு
72. "தெற்காசியாவில் விவசாய உணவு முறைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை திட்டவட்டமாக்குதல்" குறித்த பட்டறை	01	06.12.2023 முதல் 08.12.2023 வரை			வெளிநாட்டு	விவசாய உணவு முறைகளது மாற்றம் குறித்த அறிவு
73. இலங்கையில் முன்னுரிமைப் பழ மதிப்புச் சங்கிலிகளின் உற்பத்தி மற்றும் வணிகமயமாக்கலை மேம்படுத்துவதற்காக சீனாவுக்கான ஆய்வுச் சுற்றுப்பயணம்	03	05.12.2023 முதல் 15.12.2023 வரை			வெளிநாட்டு	முன்னுரிமைப் பழ மதிப்புச் சங்கிலிகளின் வணிகமயமாக்கல் குறித்த அறிவு
74. "உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்காக தினை / சிறுதானியங்கள்" என்ற தலைப்பில் சர்வதேச வட்டமேசை மாநாடு	01	12.12.2023 முதல் 14.12.2023 வரை			வெளிநாட்டு	தினை / சிறுதானியங்கள் பற்றிய அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
75. ஆசிய பிராந்திய FAW மற்றும் BPH நோயறிதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை திட்டம் (PMP+) குறித்த பயிற்சிப் பட்டறை	02	04.12.2023 முதல் 06.12.2023 வரை			வெளிநாட்டு	FAW மற்றும் BPH நோயறிதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை குறித்த அறிவு
76. விவசாய இயந்திரங்களை பரீட்சிப்பதற்கான ஆசிய மற்றும் பசுபிக் வலையமைப்பின் (ANTAM) 10 ஆவது வருடாந்த கூட்டம்	01	06.12.2023 முதல் 08.12.2023 வரை			வெளிநாட்டு	விவசாய இயந்திரங்களை பரீட்சிப்பது பற்றிய அறிவு
77. ACASA வருடாந்த திட்ட ஆய்வு மற்றும் திட்டமிடல் கூட்டம்	05	12.12.2023 முதல்14.12.2023 வரை			வெளிநாட்டு	காலநிலை தழுவல் பற்றிய அறிவுப் பரிமாற்றம்
78. "விவசாயத் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்கான விவசாய பொறியியல் தொழில்நுட்பங்கள்" குறித்த AARDO சர்வதேச பயிற்சித் திட்டம்	01	06.12.2023 முதல் 15.12.2023 வரை			வெளிநாட்டு	விவசாய பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவுப் பகிர்வு
79. FAO-China South-South Cooperation (SCC) திட்டத்தின் கீழ் ஆசியாவில் வாழை சார்ந்த பூச்சி பீடைகள் மற்றும் நோய்களின் நிலையான தடுப்பு மற்றும் முகாமை குறித்த IPPC பிராந்திய பட்டறை	01	18.12.2023 முதல் 19.12.2023			வெளிநாட்டு	வாழை சார்ந்த பூச்சி பீடைகள் மற்றும் நோய்களின் நிலையான தடுப்பு மற்றும் முகாமை குறித்த அறிவுப் பகிர்வு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் (நிகழ்நிலை)						
80. வட அமெரிக்கா மற்றும் தென்மேற்குப் பசுபிக் பகுதிக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் 16வது அமர்வு	01	30.01.2023 முதல் 03.02.2023 வரை			நிகழ்நிலை	அறிவுப் பகிர்வு
81. உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்காக தினை / சிறுதானியங்கள் குறித்த சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி	03	13.02.2023 முதல்16.02.2023 வரை			நிகழ்நிலை	தினை / சிறுதானியங்கள் குறித்த அறிவு
82. அபிவிருத்திக்கான சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு குறித்த AARDO சர்வதேச வலையரங்கம்	04	27.02.2023			நிகழ்நிலை	சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு குறித்த அறிவு
83. இரசாயனங்கள் மற்றும் கழிவு முகாமை தொடர்பில் தற்போது காணப்படுகின்ற குறிகாட்டிகள் குறித்த IOMC வலையரங்கம்	01	16.02.2023			நிகழ்நிலை	இரசாயனங்கள் மற்றும் கழிவு முகாமை தொடர்பான குறிகாட்டிகள் பற்றிய அறிவு
84. பசுமை வட்டப் பொருளாதாரம் மற்றும் பேண்தகு அபிவிருத்துக்குப் போதுமான பொருளாதாரம்	01	13.03.2023 முதல் 31.03.2023 வரை			நிகழ்நிலை	போதுமான பொருளாதாரம் குறித்த அறிவு
85. மூலப்பொருள் தயாரிப்புடன் சேர்த்து ஒரு பரவளைய பசுமையில்ல சூரிய உளர்த்தியின் பயன்பாடு	01	24.04.2023 முதல் 05.05.2023 வரை			நிகழ்நிலை	பரவளைய பசுமையில்ல சூரிய உளர்த்தி பற்றிய அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
86. உணவுப் பாதுகாப்பு - விவசாய மற்றும் உணவுக் கழிவுகளை உணவுப் பொருள் மேம்பாட்டிற்குப் பயன்படுத்துதல்	01	15.05.2023 முதல் 26.05.2023 வரை			நிகழ்நிலை	உணவுப் பொருள் மேம்பாட்டிற்காக உணவுக் கழிவுகளை பயன்படுத்துதல் குறித்த அறிவு
87. நொதித்தல் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயப் பொருட்களுக்கு மதிப்புச்சேர்த்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல்	03	01.05.2023 முதல் 21.05.2023 வரை			நிகழ்நிலை	நொதித்தல் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல் குறித்த அறிவு
88. ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அடுத்த கட்டங்கள் குறித்து ஐரோப்பிய மற்றும் 3ஆம் நாடுகளுக்கடையிலான மெய்நிகர் சந்திப்பு	01	08.06.2023			நிகழ்நிலை	ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்து தொடர்பான அறிவு
89. "உணவு பாதுகாப்பு மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான விவசாய உயிரியல் தொழில்நுட்பம்" என்ற AARDO - MARDI சர்வதேச நிகழ்நிலை பயிற்சித் திட்டம்	04	24.07.2023 முதல் 28.07.2023 வரை			நிகழ்நிலை	உணவு பாதுகாப்புக்கான விவசாய உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு
90. விவசாய நடவடிக்கைகளில் பிளாஸ்டிக்கின் பேண்தகு பயன்பாடு குறித்த தன்னார்வ நடத்தை நெறிகளை உருவாக்குவதற்கான பிராந்திய பல்வகை பங்கேற்பாளர்களது நிகழ்நிலை ஆலோசனைக்கூட்டம்	01	21.09.2023			நிகழ்நிலை	விவசாய நடவடிக்கைகளில் பிளாஸ்டிக்கின் பேண்தகு பயன்பாடு குறித்த அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
91. காலநிலை மாற்றத்துக்கு எதிரான நிலைப்புத்தன்மைக்கான விவசாய புத்தாக்கங்கள் குறித்த பயிற்சிப் பட்டறை	01	12.09.2023 முதல் 14.09.2023 வரை			நிகழ்நிலை	காலநிலை மாற்றத்துக்கு எதிரான நிலைப்புத்தன்மைக்கான விவசாய புத்தாக்கங்கள் குறித்த அறிவு
92. காலநிலைதகவுடைய விவசாயம் குறித்த சர்வதேச மாநாடு	01	08.11.2023 முதல் 10.11.2023 வரை			நிகழ்நிலை	காலநிலை தகவுடைய விவசாயம் குறித்த
93. JICA அறிவு இணை உருவாக்கத் திட்டம்: சமூகம் சார்ந்த விவசாய வணிகத்திற்கான உணவு மதிப்புச் சங்கிலியை மேம்படுத்தல் குறித்த பயிற்சி வகுப்பு	01	01.11.2023 முதல் 10.11.2023 வரை			நிகழ்நிலை	உணவு மதிப்புச் சங்கிலி பற்றிய அறிவு
94. உணவில் உள்ள எச்சங்கள் மற்றும் அசுத்தங்களை பகுப்பாய்வு செய்வதற்கான நவீன முறைகள் பற்றிய வலையரங்கு	38	20.12.2023			நிகழ்நிலை	உணவில் உள்ள எச்சங்கள் மற்றும் அசுத்தங்களை பகுப்பாய்வு செய்வதற்கான நவீன முறைகள் பற்றிய அறிவு
உள்நாட்டு பல்கலைக்கழகங்களின் முதுகலை கற்கைகள்						
95. பிரயோக பொருளியலில் துறையில் முதுகலைப் பட்டம்	01	11.02.2023 முதல் 03.02.2024 வரை	125		உள்நாட்டு	பிரயோக பொருளியலில் பற்றிய அறிவு
96. கணக்கியல் மற்றும் நிதியியல் துறையில் முதுகலை அறிவியல் பட்டம்	01	06.01.2024 முதல் 31.12.2025 வரை	259.2		உள்நாட்டு	கணக்கியல் மற்றும் நிதியியல் பற்றிய அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
உள்நாட்டு பல்கலைக்கழகங்களின் இளங்கலை கற்கைகள்						
97. இளங்கலை அறிவியல் பட்டம் (விவசாயம்)	02	19.06.2023 முதல்18.06.2027 வரை 11.02.2023 முதல் 03.02.2024 வரை			உள்நாட்டு	விவசாயம் பற்றிய அறிவு
ஏனைய உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்						
98. இலங்கையில் தாவர தடுப்புக்காப்பு சேவையினை நவீனமயமாக்கல்: இலங்கையில் தாவர தடுப்புக்காப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளுக்கான உள்ளூர் நடைமுறை ரீதியான பயிற்சி(KOICA திட்டம்)	12	30.01.2023 முதல்10.02.2023 வரை			உள்நாட்டு	தாவர தடுப்புக்காப்பு பற்றிய அறிவு
99. நல்ல விவசாய நடைமுறைகள், மதிப்புச் சங்கிலி மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான விவசாய கூட்டுறவு தொடர்பான பயிற்சி (KOICA திட்டம்)	30	10.07.2023 முதல் 12.07.2023 வரை			உள்நாட்டு	நல்ல விவசாய நடைமுறைகள், மதிப்புச் சங்கிலி மற்றும் விவசாய கூட்டுறவு தொடர்பான அறிவு
100. KOICA தாவர தடுப்புக்காப்பு செயற்பாடுகள் குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி	10	24.07.2023 முதல் 09.08.2023 வரை			உள்நாட்டு	தாவர தடுப்புக்காப்பு செயற்பாடுகள் குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
101. KOICA பூச்சியியல் (பூச்சிபீடை) குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி	10	24.07.2023 முதல் 09.08.2023 வரை			உள்நாட்டு	பூச்சியியல் தொடர்பான அறிவு
102. KOICA நோயியல் (பாக்டீரியா மற்றும் வைரஸ்) குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி	10	24.07.2023 முதல் 09.08.2023 வரை			உள்நாட்டு	பாக்டீரியா மற்றும் வைரஸ் தொடர்பான அறிவு
103. KOICA நோயியல் (பூஞ்சை) குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி	10	24.07.2023 முதல் 09.08.2023 வரை			உள்நாட்டு	பூஞ்சை தொடர்பான அறிவு
104. KOICA தாவர தடுப்புக்காப்பு செய்கைமுறை குறித்த நடைமுறை ரீதியான பயிற்சி	10	24.07.2023 முதல் 09.08.2023 வரை			உள்நாட்டு	தாவர தடுப்புக்காப்பு செய்கைமுறை குறித்த அறிவு
105. தாவர தடுப்புக்காப்பு அதிகாரிகளுக்கான தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்பு (AIMS): PQIMS செயலாக்க பயிற்றுவிப்புக்கற்கை (IT)	50	11.09.2023 முதல் 21.09.2023 வரை			உள்நாட்டு	PQIMS செயலாக்கம் பற்றிய அறிவு
106. தாவர தடுப்புக்காப்பு அதிகாரிகளுக்கான தாவர தடுப்புக்காப்பு தகவல் முகாமை அமைப்பு (AIMS): PQIMS பயன்பாட்டு முறை பயிற்சியாளர் படிப்பு	50	28.08.2023முதல் 07.09.2023வரை			உள்நாட்டு	PQIMS செயலாக்கம் பற்றிய அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
107. குடிசார் மற்றும் கட்டுமான அமைப்புசார் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு பற்றிய சான்றிதழ் கற்கை	02	07.01.2023முதல்07.15.2023 வரை	90		உள்நாட்டு	குடிசார் மற்றும் அமைப்புசார் பூச்சி கட்டுப்பாடு மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு பற்றிய அறிவு
108. நிலப்பரப்பு / புவியியல் தகவல் தொழில்நுட்ப பாடநெறி	02	17.07.2023முதல்21.07.2023 வரை	29.9		உள்நாட்டு	நிலப்பரப்பு / புவியியல் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு
109. கட்டுமான வடிவமைப்பு பற்றிய பாடநெறி	01	15.07.2023 முதல்19.08.2023 வரை	15		உள்நாட்டு	கட்டுமான வடிவமைப்பு பற்றிய அறிவு
110. இடர் முகாமைக்கான டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி	02	23.05.2023முதல்25.05.2023வரை			உள்நாட்டு	இடர் முகாமைக்கான டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்த அறிவு
111. SEAROJEE வசதிப்படுத்தும் கருத்தரங்கு	02	02.08.2023முதல்03.08.2023 வரை			உள்நாட்டு	கூட்டு வெளிப்புற மதிப்பீடு பற்றிய அறிவு
112. இலங்கைக்கான அயனமண்டல பழப் பயிர்ச்செய்கை மற்றும் செயலாக்க தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கு	06	25.09.2023முதல்29.09.2023வரை			உள்நாட்டு	அயனமண்டல பழப் பயிர்ச்செய்கை மற்றும் செயலாக்க தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவு
113. விவசாயக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் அவற்றை திறம்பட செயல்படுத்துவதற்கும் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவது குறித்த இரண்டு நாள் பயிற்சி	12	23.11.2023முதல் 24.11.2023 வரை			உள்நாட்டு	விவசாயக் கொள்கை உருவாக்கம் மற்றும் அவற்றை திறம்பட செயற்படுத்தல் குறித்த அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
114. FAO-China South –South Cooperation (SSC) திட்டத்தின் மாம்பழ பூச்சி பீடை மற்றும் நோய் முகாமை குறித்த பிராந்திய பட்டறை	25	21.12.2023 முதல் 22.12.2023 வரை			உள்நாட்டு	மாம்பழ பூச்சி பீடை மற்றும் நோய் முகாமை குறித்த அறிவு
115. 2023 ஆம் ஆண்டிற்கான அறிவு முகாமை நிகழ்ச்சி	24	2023.01.31			உள்நாட்டு	உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான அறிவு மற்றும் மனப்பாங்கு வளர்ச்சி
116. விவசாய திணைக்களத்திற்கு சேவை இடமாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	34	2023.01.17,18,19,20			உள்நாட்டு	திணைக்களம் பற்றிய அறிவை வழங்குதல்
117. பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 18/2020க்கு ஏற்ப அரச கரும மொழிப் பயிற்சி (ஆரம்ப நிலை)	96	2023.03.14 முதல் 2023.07.25 வரை	75,000.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி தொடர்பான சிறந்த அறிவை வழங்குதல்
118. பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 18/2020க்கு ஏற்ப அரச கரும மொழிப் பயிற்சி (இரண்டாம் நிலை –A பிரிவு)		2023.03.16 முதல் 2023.07.01 வரை	112,500.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி தொடர்பான சிறந்த அறிவை வழங்குதல்
119. பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 18/2020க்கு ஏற்ப அரச கரும மொழிப் பயிற்சி (இரண்டாம் நிலை – Bபிரிவு)	91	2023.03.17 முதல் 2023.06.25 வரை	112,500.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி தொடர்பான சிறந்த அறிவை வழங்குதல்

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூ'000)		திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு)	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
120. ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களுக்கான தகவல் தொடர்பாடல் திறன் பயிற்சி	52	2023.03.27 மற்றும் 28	111,200.00		உள்நாட்டு	தகவல் தொடர்பாடல் திறன்கொண்ட உத்தியோகத்தர் குழுவொன்றை உருவாக்குதல்
121. அலுவலக முகாமை தொடர்பான பயிற்சி	83	2023.10.06			உள்நாட்டு	கடமைகளை சரியாகவும் முறையாகவும் முன்னெடுப்பதற்கான அறிவை வழங்குதல்
122. அரச உத்தியோகத்தர்களின் விடுமுறை தொடர்பான பயிற்சி	60	2023.12.08			உள்நாட்டு	விடுமுறை தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு உள்ள சந்தேகங்களை தீர்த்தல்
123.அடிப்படை உயிர்காப்பு தொடர்பான பயிற்சித் திட்டம்	160	2023.09.18	21,725.00	-	உள்நாட்டு	அவசர நிலமையில் எவ்வாறு செயற்படுவது குறித்த அறிவை வழங்குதல்

கணக்கீட்டு உத்தியோகத்தர்,
விவசாயத் திணைக்களம்.

விவசாயத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கை

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 285 - விவசாயத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் கூடிய 2022 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளக நிருவாகங்களைக் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானங்கள்,செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்றுக்கள் அற்றவை என நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் அற்றவை என உறுதிப்படுத்தல் ஒன்றாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பாதிப்புச் செலுத்துவதன் காரணமாக அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், அதன் அளவுசார் தன்மை மேற்படி நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிபாலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால் மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார் பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணத்தினால் ஆகும்.
- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்**

1.6.1 முற்பணக் கொடுப்பனவுகள்

நிதிச் செயலாற்றுகைக் கூற்றிற்கு அமைய (ACA-F) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முற்பண வரவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூ. 1,348,571,573 தொகை மற்றும் ரூ. 1,294,318,401 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் குறிப்புக்களுக்கு அமைய முற்பண வரவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூ.1,349,780,930 தொகை மற்றும் ரூ. 1,294,573,401 தொகை ஆகையினல் முற்பண வரவுகள் ரூ. 1,209,357 தொகையினாலும் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூ. 255,000 தொகையினாலும் குறைவாகக் கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தன.

1.6.2 நிதி அல்லாத சொத்துக்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று அடையாளம் காணப்பட்டு இருந்த வாகனங்களின் பெறுமதி ரூ. 1,600,904,975 தொகை எனினும், திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைய அது ரூ. 1,605,524,742 தொகை ஆக இருந்தமையினால் ரூ. 4,619,766 தொகை வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் ரூ. 7,119,325,465 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டு இருந்த பெறுமதிக்கு அமைய அது ரூ. 1,809,182,290 தொகை ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய மொத்தம் ரூ. 5,310,143,175 தொகை வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் 1248 சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்து கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை

(இ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணிகளின் பெறுமதி ரூ. 17,849,002,464 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டு இருந்த பெறுமதிக்கு அமைய அது ரூ. 11,664,574,116 தொகை ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய மொத்தம் ரூ. 6,184,428,348 தொகை வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் திணைக்களத்திற்கு உரித்தான 372 காணிகள் விலை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

1.6.3 வணிக முற்பணக் கணக்கு

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) பெல்வெஹர பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய ரூ. 791,608 தொகை படுகடன் மீதியினை ரூ. 79,168 எனக் கணக்கில் சேர்க்கப்பட்டமையின் காரணமாக படுகடன் மீதி ரூ. 712,440 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) படஅத பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு, ஹம்பாந்தோட்டை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 150,000 தொகை படுகடன் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) தெலிஜ்ஜவில பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய படுகடன் மீதியில் ஒப்பந்த விதை நிகழ்ச்சித்திட்டத்திற்கு (201 கணக்கிற்கு) உரித்தான ரூ. 128,116 தொகை படுகடன் மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டு இருந்தது.

(ஈ) மீபிலிமான விதை உருளைக்கிழங்கு உற்பத்திப் பண்ணைக்கு உரித்தான 05 மோட்டார் வாகனங்களின் பெறுமதியினை விலை மதிப்பீடு செய்து தேய்மானம் கணிப்பிடப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) பொலன்னறுவை விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கழித்து ஒதுக்கப்பட்டு இருந்த பொறிகளுக்கு உரிய திரண்ட தேய்மானத்தின் பெறுமதி ரூ. 4,638,657 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அது ரூ. 3,478,042 தொகை என ரூ. 1,160,615 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஊ) உடரெதெல்ல விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் இருப்புக்களின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ஏனைய நுகர்வோர் பண்டங்களின் இருப்புக்களின் பெறுமதி ரூ. 968,093 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூ. 1,816,959 எனக் குறிப்பிடப்பட்டு இருந்தமையினால் ஏனைய நுகர்வோர் பண்டங்களின் இருப்பு ரூ. 848,866 தொகை அதிகமாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(எ) விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திக் கணக்கின் கீழ் அடையாளம் காணப்பட்டு இருந்த ரூ. 57,500,314 தொகை பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு ஒன்று மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் பண்ணை முற்பணக் கணக்கிற்கு மாற்றி மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளாது செலவின் மீது ரூ. 1,437,507 தொகை மீதி ஒன்று பண்ணை முற்பணக் கணக்கில் ஆண்டின் தேய்மானமாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(ஏ). மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கழித்து ஒதுக்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கு உரித்தான ரூ. 24,364,021 தொகை திரண்ட தேய்மானம், தேய்மான ஒதுக்கு நிதியக் கணக்கினைப் பற்று வைத்து திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும் எனினும், அதற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

1.6.4 கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து நிறைவு செய்யும் முற்பணக் கணக்கு

நிதி ஒழுங்குவிதி 518 (3) இன் பிரகாரம் முற்பணப் பணியினை மூடி வைத்ததன் பின்னர் அடுத்து வரும் வருடத்தில் கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் எனினும் விவசாயத் திணைக்களத்தின் கீழ் நிலவிய 05 வணிக முற்பண நடவடிக்கைகளை 1991 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதியில் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றிற்கு அமைய மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறு வணிக முற்பணக் கணக்கினை மூடி வைத்து 20 இற்கும் 31 இற்கும் இடைப்பட்ட காலம் சென்றிருந்த போதிலும், கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கணக்குகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் கைச்சாத்திடல்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) 2017 ஏப்பிறல் 27 ஆம் திகதிய மற்றும் 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்திக்கு ஒத்தியங்காத வகையில் 02 செலவு விடயங்களில் ஒதுக்கீடுகளைத் தாண்டி ரூ. 871,828 தொகை பொறுப்புக்களில் கைச்சாத்திடப்பட்டு இருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பு (iv) இற்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூ. 7,251,091 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட SA 92 ஆவணத்திற்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி ரூ. 15,098,673 ஆகக் காணப்பட்டது.

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்தியங்காமை

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள் தொகுதி 1 இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பந்திக்குப் புறம்பான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு திணைக்களத்தின் 7 அலகுகளில் இணைக்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர்கள் 183 பேர் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒரே தாபனத்தில் சேவையில் ஈடுபட்டு வந்தனர்.

2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நி.ஒ. 753 (2) இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது கன்னோருவை தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், ரூ. 1,900,734 தொகை பெறுமதியான இரசாயனகூட மேசைகளைக் கொள்வனவு செய்யும் போது பொருட்கள் கிடைக்கப்பெற்று இருக்காத வேளையில், களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் பொருட்கள் கிடைக்கப் பெற்றதாக போலியாகக் குறிப்பிட்டு பொது 219 வழங்கப்பட்டு இருந்தது. 2023 மார்ச் 15 ஆம் திகதி ஆகும் போதும் உரிய பொருட்கள் கிடைக்கப்பெற்று இருக்கவில்லை என்பதுடன் அதற்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட ரூ. 1,900,734 தொகை பெறுமதியான காசோலை ஒன்று 75 நாட்களாக விரிவாக்கல் கணக்குப் பிரிவில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

(ஆ) 03 அரச விதை உருளைக் கிழங்குப் பண்ணைகளுக்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த 03 Front end loaders களுக்காக 03 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 9,449, 925 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு உரிய காசோலைகள் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி ஆகும் போது அனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் போலியான பொது 219 சான்றிதழின் மீது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த உரிய உபகரணங்கள் 2023 மார்ச் 30 ஆம் திகதி ஆகும் போதும் பண்ணைகளுக்கு கிடைக்கப்பெற்று இருக்கவில்லை.

2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தாட்சிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விவசாயத் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்கான வினைத்திறனுள்ள உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்து பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் வினைத்திறன் தொடர்பில் அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்புக்களை வினைத்திறனாக பேணி வருவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு முன்வைத்தல் வேண்டும் எனினும், அவ்வாறான ஒரு மீளாய்வினை மேற்கொண்டதாக கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

2.5 வங்கிக் கணக்குகளைக் கண்காணித்தல்

திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு உரிய வகையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் விரிவாக்கல் நடவடிக்கைகளுக்காக எழுதப்பட்ட ரூ. 10,309,346 பெறுமதியான 26 காசோலைகள் உரிய பணம் பெறுவனருக்கு வழங்கப்படாமல் பரீட்சிக்கப்பட்ட தினமாகிய 2023 மார்ச் 15 ஆம் திகதி ஆகும் போதும் கணக்குகள் பிரிவில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

விதை உற்பத்திப் பண்ணையின் பிரதான நோக்கம் தரமான விதை உற்பத்தி எனினும், முளைத்தல் வீதம் நூற்றிற்கு 50 -75 வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 50% குறைத்தும் மற்றும் முளைத்தல் வீதம் நூற்றிற்கு 25 - 50 வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 75% குறைத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தது.

3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினைப் பெற்றுக் கொள்ளாமை

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு தேவையான விதைகளை உரிய காலப் பகுதிக்குள் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் 04 போகங்களில் 16 சந்தர்ப்பங்களில் 07 பயிர் வகைகளுக்கு உரிய வகையில் எதிர்பார்க்கப்பட்ட விதை 4810 கி.கிராம் தொகையினை உற்பத்தி செய்ய முடியாமல் போயுள்ளது.

(ஆ) மஹாஇலுப்பல்லம விதை உற்பத்திப் பண்ணையில் 2019 ஆம் ஆண்டில் சிறு போகம் தொடக்கம் 2022 சிறு போகம் வரையான 07 போகங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த விதை

நெல் உற்பத்தி 3,067,620 கி.கிராம் ஆகக் காணப்பட்ட போதிலும், மேற்படி காலப்பகுதிக்குள் ரூ. 86,001,891 தொகையினை செலவிட்டு விதை நெல் 1,400,265 கி.கிராம் எனும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 46 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறே மேற்படி காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட மொத்த மேலதிக உணவுப் பயிர்களின் விதை உற்பத்தி 51,040 கி.கிராம் எனினும், ரூ. 23,875,563 தொகையினை செலவழித்து மேலதிக உணவுப் பயிர்களின் விதை 10,823 கி.கிராம் எனும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 21 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது.

3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் வருடாந்த நகல் செயலாற்றுகை அறிக்கை ஒன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

3.4 சொத்து முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) 1974 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 224 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களுக்கு உரிய 2191 ஹெக்ரயார் நிலப் பரப்பு முறையாக எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களில் நிலவும் மொத்தம் ரூ. 116,979,640 தொகை பெறுமதியான 261 இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 01 தொடக்கம் 07 வருடங்கள் வரையான காலப்பகுதி தொடக்கம் பயன்படுத்தாது செயலற்று மற்றும் குறைவான பயன்பாட்டில் இருந்தது.

(இ) விவசாயத் திணைக்களத்திற்கு பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெற்று இருந்த 09 நிறுவனங்களில் நிலவும் 23 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 46 அலகுகளுக்கு உரிய கைவினை டிரக்டர்கள் மற்றும் 105 டிரக்டர்கள் என்பன 2022 நவெம்பர் 30 ஆம் திகதி ஆகும் போதும் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் 72 வாகனங்கள் மற்றும் 183 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றிற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) திணைக்களத்தின் 11 அலகுகளுக்கு உரிய கைவினை டிரக்டர்கள், டிரக்டர்கள் மற்றும் 40 இலை அரைக்கும் இயந்திரங்கள் என்பன கழித்து ஒதுக்குவதற்காக அனுப்பப்பட்டு இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு ஆகும் போதும் அதன் கழித்து ஒதுக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தின் 72 அலகுகளுக்கு உரிய வகையில் 396 அரச இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் பலனற்றுக் காணப்பட்டன.

(எ) படைப் புழுக் கருத்திட்ட ஆய்வு மற்றும் அது தொடர்பாக கண்டறிவதற்காக விவசாய இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ. 6,395,847 தொகையினைச் செலுத்தி 2019 டிசம்பர் 20 ஆம் திகதி ட்ரோனர் கெமராக் கட்டமைப்பு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. எனினும் இந்தக் கெமராக் கட்டமைப்பினால் எதிர்பார்க்கப்பட்ட பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக ட்ரோன் மென்பொருளினை தாபிப்பதற்காக தேவையான டெஸ்க்டொப் கணினி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு இயலாமல் சென்றமையின் காரணமாக இந்தக் கெமரா 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயனின்றிக் காணப்பட்டது.

3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

நிதிக் கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த நிதி ஒழுங்குவிதி 104 இன் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது 1976 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவும் ரூ. 104,443,743 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கு உரிய 383 நிகழ்வுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1981 நவெம்பர் 02 ஆம் திகதிய மற்றும் 165/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கொழும்பு, கட்டுநாயக்க, திருகோணமலை, தலைமன்னார், காலி மற்றும் காங்கேசந்துறை துறைமுகங்களில் தாவரத் தடுப்புக்காப்புச் சேவை அலகு ஒன்று தாபிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு உரிய 6656 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் மூலம் வேறாக்கப்பட்டு இருந்த 1.5 ஏக்கர்களுக்கு உரிய 21 காணித் துண்டுகளை அத்துமீறிக் குடியேறியவர்கள் பயன்படுத்தி உள்ளதுடன் அதில் 2 துண்டுகளில் நிலையான நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

(இ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணையில் 11 சிறிய அளவிலான குளங்களில் சேற்று மண்ணை அகற்றும் தேவைப்பாடு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அடையாளம் காணப்பட்டு 04 வருட காலம் கழிந்து இருந்த போதிலும், இந்தக் குளங்களில் சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணையில் காய்கறிச் செய்கையின் வரிசைகளுக்கு இடையில் களைகளை ஒழிப்பதற்காக Kubota RK -80 வகை இரண்டு சக்கர டிரக்டர் வண்டிகளின் தேவைப்பாடு காணப்பட்ட போதிலும் தேவைப்பாட்டினை சரியாக அடையாளம் காணாது விவசாயத் திணைக்களத்தினால் Brown Yanmar வகையான இரண்டு இரட்டைச் சக்கர டிரக்டர் வண்டிகள் வழங்கப்பட்டு இருந்தன. அதற்கு அமைய காய்கறிச் செய்கையின்

வரிசைகளுக்கு இடையில் களைகளை ஒழிப்பதற்காக இந்த இயந்திரங்கள் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டு பின்னர் மேற்படி இரண்டு டிரக்டர் வண்டிகளையும் தெலிஜ்ஜவில மற்றும் படஅத பண்ணைகளுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

(உ) மஹாஇலுப்பல்லம அரச விதை உற்பத்திப் பண்ணையில் சேதனப் பசளை உற்பத்திக்காக கடந்த வருடத்தின் டிசம்பர் மாதம் ரூ. 1,709,800 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 சொப்பர் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் 2023 சனவரி 12 ஆம் திகதி ஆகும் போதும் இந்த இயந்திரங்கள் சேதனப் பசளைத் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) மஹாஇலுப்பல்லம பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரித்தான 06 களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு இருந்த விதை நெல் 273508 கிலோ கிராம் தொகையில் விதை நெல் 239991 கிலோ கிராம் அளவாகிய மொத்த விதையின் அளவில் நூற்றிற்கு 88 வீதம் தகுதியற்ற விதைகள் என விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

(எ) திணைக்களத்தின் 54 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த கைவினை டிரக்டர்கள், டிரக்டர்கள் மற்றும் 139 இலை அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் 32 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த 84 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

4. மனித வள முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) விவசாயத் திணைக்களத்தின் 1050 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் உட்பட அனுமதிக்கப்பட்ட ஆளணி 12374 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் 658 பேர் உட்பட வெற்றிடங்கள் 2726 ஆகக் காணப்பட்டன.

(ஆ) விவசாயத் திணைக்களத்தின் 303 ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோப்புக்கள் வேலை பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் ஓய்வூதியம் செலுத்த முடியாமல் காணப்பட்டன.

எச்.ஏ.ஆனந்த
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்.